வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 09.05.2022 திங்கட்கிழமை இதழ் : 154 பக்கங்கள் : 16




# பிரதமராகிறார் கரு ஜெயசூரிய? பல்வேறு கட்சிகளும் இணக்கம்!



## பிரதமர் மஹிந்த இன்று விலகலாம்!

கொழும்பு, மே 09

சர்வகட்சிகள் இணைந்து அமைக்கவுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக கரு ஜெயசூரியவை நியமிக்க பல கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ கரு ஜெயசூரியவை பிரதமராக நியமிப்பதற்கு கர்தினாலுடன் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பிலும் இணங்கியிருந்தார் என்று அறிய வருகின்றது.

கரு ஜெயசூரியவை பிரதமராக நியமிப்பதற்கு தனித்து இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிப்பார்கள் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் பாராளுமன்ற உறுப்பினராக கரு ஜெயசூரிய இல்லை. இதனால், அவர் பாராளுமன்றம் வரு 15

# 21ஆவது திருத்தச் சட்டம்; வெளியானது வர்த்தமானி!

## 6 வாரங்களுள் நிறைவேற்ற நடவடிக்கை

கொழும்பு, மே 09

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தி, பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிக்கும் விதமான திருத்தங்களை உள்ளடக்கி ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த பிரேரணை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டது.** 15

# சட்டத்தரணிகள் சங்கத்தின் யோசனை பரிசீலிக்கப்படும்!

## ஜனாதிபதி உறுதியளிப்பு

கொழும்பு, மே 09

அரசமைப்புக்கு இணங்க, தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையை போக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

# ஜனாதிபதி செயலற்றதன்மை; மகாநாயக்க தேரர்கள் கண்டனம்!

## மூன்றாவது கடிதம் அனுப்பினர்

கொழும்பு, மே 09

ஜனாதிபதி உள்ளிட்ட அரச தலைவர்களின் செயலற்ற தன்மைக்கு அதிருப்தி தெரிவித்து மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் மற்றுமொரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் 15

# கடலில் குத்துகரணம் அடித்தவர் கழுத்து எலும்பு முறிந்து மரணம்!

## வேலணையில் துயர சம்பவம்

யாழ்ப்பாணம், மே 09

பிள்ளைகள் கேட்டதால் கடலில் குத்துக்கரணம் அடித்த குடும்பஸ்தர் கழுத்து எலும்பு முறிந்து உயிரிழந்தார்.

நேற்று வேலணை சாட்டிக் கடலில் இடம்பெற்ற இந்தத் துயர சம்பவத்தில், அரியாலை - நாயன்மார் கட்டைச் சேர்ந்த இராசரட்ணம் கணேசராஜா (வயது 47) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

அவர், விடுமுறையை களிக்க குடும்பத்தினருடன் கடலில் சென்றிருந்தார். பிள்ளைகளுடன் சேர்ந்து கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது குத்துகரணம் அடிக்குமாறு தந்தையை கேட்டுள்ளனர். 15

# பலாப்பழம் பிடுங்க மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து மரணம்!



முல்லைத்தீவு, மே 09

பலாப்பழம் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறிய முதியவர் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

முள்ளியவளை, கணுக்கேணி கிழக்கு பகுதியில் வசித்து வந்த 72 வயதுடைய தம்பாப்பிள்ளை கனகராசா என்பவரே உயிரிழந்தார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாடசாலையில் பயிலும் மாணவர் எண்ணிக்கை 33,000ஆல் வீழ்ச்சி!

கொழும்பு, மே 09

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 33 ஆயிரத்தால் வீழ்ச்சியடைந்ததாக மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடம் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 42 இலட்சத்து 38 ஆயிரத்து 760 ஆக குறைவடைந் 15

# மண்ணெண்ணெய் வாங்க வரிசையில் நின்றவர் பலி!

## யாழ்ப்பாணத்தில் துயரம்

யாழ்ப்பாணம், மே 09

இரண்டு தினங்களாக மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்தும் மண்ணெண்ணெய் கிடைக்காத நிலையில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - அளவெட்டி மத்தியை சேர்ந்த கந்தசாமி நடராசா (வயது 80) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த முதியவர் வெள்ளிக்கிழமை மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அளவெட்டி - மல்லாகம் பலநோக்கு 15

# கடலில் மூழ்கி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 09

பிரான்ஸிலிருந்து விடுமுறைக்காக நாடு திரும்பிய ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - அரியாலை கிழக்கில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், கொக்குவிலை சேர்ந்த ஜே. ஞானப்பிரகாசம் 15

# இரண்டு நிபந்தனைகளுடன் இடைக்கால அரசுக்கு ஆதரவு

## மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, மே 09

ஜனாதிபதி விலகிச் செல்ல வேண்டும், நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்ற வழிப் பாதையுடன் இடைக்கால அரசாங்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடனான பேச்சில் அந்தக் கட்சி உறுதியளித்துள்ளது.

நேற்றைய தினம் இலங்கை சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகளும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு அவரது தம்பியும் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ கேட்டதாக ஒரு செய்தி வெளிவந்து சில நிமிடங்களிலேயே அதனை பிரதமர் அலுவலகம் மறுத்திருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஜனாதிபதி மாளிகையில், (அதுவே இப்போது ஜனாதிபதி செயலகமும் கூட) நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் பிரதமரை பதவி விலகுமாறு ஜனாதிபதி கேட்டதாகவும், ஆனால் அதனை சில அமைச்சர்கள் விரும்பவில்லை என்றும், வேறு சிலர் விரும்பியதாகவும் செய்திகள் வெளிவந் திருந்தன.

நாட்டில் பரவலாக நடக்கும் போராட்டங்களுக்கு பணிந்து பதவியை விலகுவது சரியானதாக இருக்காது என்று அந்தக் கூட்டத்தில் பிரதமர் தனது கருத்தை சொல்லியபோதிலும், ஜனாதிபதி அழுத்தமாக சில விடயங்களைக் கூறியதாகவுமே அந்தச் செய்திகள் வெளிவந்திருந்தன. எதிர்வரும் திங்கள் கிழமை (இன்று) பிரதமர் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுவிட்டு பதவி விலகுவார் என்றே அந்தச் செய்திகள் தெரிவித்திருந்தன.

ஆனால், அவ்வாறு செய்திகள் வெளிவந்தாலும்கூட ஒரு சில மணி நேரங்களிலேயே பிரதமர் அலுவலகம் அதனை மறுத் திருந்ததோடு, ஜனாதிபதி அவ்வாறு பிரதமரைக் கேட்கவில்லை என்றும் விளக்கமளித்திருந்தது.

அவர் அவ்வாறு கேட்டாரா இல்லையா என்பதை யாரையும்கேட்டுத்தான் நாம் அறியவேண்டும் என்பதல்ல. ஜனாதிபதி அவ்வாறு கேட்டாரா, யார் சொல்வது உண்மை என்பதை பலரும் தத்தமக்கு புரிந்த வகையில் வியாக்கியானம் செய்துகொண்டிருந்தபோதே இந்தச் செய்தியும் வெளிவந்தது.

தான் அமைக்க விரும்பும் இடைக்கால அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி அவரிடம் கேட்டதாக வெளிவந்த செய்தி மறைமுகமாக ஒரு தகவலை நமக்குச் சொல்லியிருக்கின்றது.

தற்போதைய பிரதமர் பதவி விலகாவிட்டால், சஜித் பிரேமதாசவை இடைக்கால பிரதமராக பதவியை ஏற்றுக்கொள்ள முன்வாருங்கள் என்று ஜனாதிபதி கேட்டிருக்க மாட்டார்.

இந்தச் செய்தியே அன்றைய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் நடந்தது என்ன என்பதை ஓரளவிற்கு ஊகிக்க வைத்திருக்கின்றது.

இதேவேளை, நேற்றைய தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அனுராதபுரத்திற்கு விஜயம் செய்து சிறி மகாபோதி, மிரிசுவெட்டிய, ருவன்வெலிசய ஆகிய புனித தலங்களுக்கு சென்று வழிபாடுகள் செய்ததோடு, கொழும்பு திரும்பியிருக்கின்றார்.

ஏற்கனவே, வெளிவந்த செய்திகளைப் போல, இன்று பிரதமர் பதவி விலகுவதற்கு திட்டமிட்டிருக்கலாம் என்றும், அதற்காகவே, முன்னதாக புனித தலங்களுக்கு சென்று வழிபட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுவதாக சில தகவல்கள் தெரிவித்தன.

இதைவிட, எதிர்க்கட்சி சபாநாயகரிடம் கையளித்துள்ள அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்திருப்பதும், அந்த பிரேரணையை ஆதரிக்கப்போவதாக சுயாதீனமாக இயங்கும் குழுவினர் கூட்டாக அறிவித்திருப்பதும் மற்றுமொரு செய்தியைச் சொல்லியிருக்கின்றது.

பிரதிச் சபாநாயகர் தேர்வின்போது, சுயாதீனக்குழுவின் வேட்பாளரை ஆதரித்து, நெருக்கடியை தற்காலிகமாக சமாளித்துக்கொண்ட ஆளுந்தரப்பு, அந்த வாக்கெடுப்பின் மூலம் தனது பலத்தையும் அறிந்துகொண்டிருக்கின்றது.

சுயாதீனக்குழுவுடன் சேர்த்து, அரசின் பலம் நூற்றி நாற்பத்தியெட்டு என்றால், அது இல்லாமல் அதனது பலம் என்ன என்பதும் அரசுக்கு - முக்கியமாக, மஹிந்த தரப்பிற்கு இப்போது தெரியவந்திருக்கின்றது.

ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு வந்தால், அதனை தாக்குப்பிடிக்க முடியுமா என்பதை தெரிந்துகொண்ட பின்னரும் பிரதமர் பதவியை இறுகப்பிடித்துக்கொண்டிருக்கும் அளவிற்கு மஹிந்த அரசியல் அறிவு இல்லாதவரல்லர்.

சர்வகட்சி இடைக்கால அரசிற்கு இதுகாலவரை தடையாக இருந்த ஒரு விடயம் விரைவில் இல்லாமல் போய்விடும் என்றே இப்போது பரவலாக நம்பப்படும் நிலையில், அடுத்து என்ன நடக்கும் என்பதே இன்று எல்லோர் மனதிலும் எழும் முக்கிய கேள்வி.

இதேவேளை, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, சபாநாயகரிடம் கையளித்திருந்த இருபத்தியோராவது அரசியலமைப்பு திருத்தம் சபாநாயகரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அந்த விவகாரமும் அதாவது, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் விடயமும் சரியான திசையிலேயே நகர்ந்துகொண்டிருப்பது தெரிகின்றது.

இப்படியே நல்லவையே நடந்துகொண்டிருந்தால், நாட்டுக்கும் நல்லது, நமக்கும்தான்!

- ஊர்க்குருவி

# போராட்டங்களில் வன்முறைகள் ஏற்படுத்தப்படும் பேராபத்து நிலை!

## சுமந்திரன் எம். பி. எச்சரிக்கை

கொழும்பு, மே 09

அவசரமாக, அவசரகால நிலைமை அமுலாக் கப்பட்டுள்ளமையால், முன்னெடுக்கப்பட்டு வரும் வெகுஜனப் போராட்டங்களுக்குள் வன்முறைகள் ஏற்படுத்தப்படும் பேராபத்தான நிலைமை தற்போது உருவாக்கியுள்ளது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், இதுகால வரையிலும் அமைதிவழியில் போராடியவர்கள் அதனை தொடர்ந்தும் பின்பற்றவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். ஜனநாயக நிறுவனங்களை சிதைக்கும் வகையில் செயல்பட வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அமுலாக்கப்பட்டுள்ள அவசரகால நிலைமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தாவது,

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வெகுஜனப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இவ்வாறானதொரு சூழலில் அவசரமாக ஜனாதிபதி கோட்டா பயவால் அவசரகால நிலைமை அமுலாக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயல்பாடானது உள்நோக்கம் கொண்டதாக கொள்ளவேண்டியுள்ளது.

குறிப்பாக, பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட தருணத்தில் அவசரகால நிலை அமுலாக்கப்பட்டிருப்பதானது ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களுக்குள் வன்முறைகளை உருவாக்கும் பேராபத்தையும் கொண்டிருக்கின்றது. ஆகவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் எவ்வாறு வன்முறைகளுக்கும், திசைதிருப்பல்களுக்கும் இடமளிக்காது பாராட்டத்தக்க வகையில் செயல்பட்டது போன்று இன்னமும் அதீத கவனத்துடன் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதேநேரம் தற்போது 21மற்றும் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியாகியுள்ளன.

ஆகவே ஜனநாயக நிறுவனங்கள் ஊடாகவே மாற்றங்களை ஏற்படுத்த முடியும். முறைமையை மாற்ற முடியும். அந்த நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே, ஜனநாயக நிறுவனங்களை முடக்குவதாலோ அல்லது சிதைப்பதாலோ எதுவும் நிகழ்ந்து விடாது. அந்த வகையில் ஜனநாயக நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் குந்தகம் விளைவிக்காது இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாம் எத்தனையோ இரத்த ஆறு ஓடிய பின்னரும் இன்னமும் ஜனநாயக கட்டமைப்புக்கள் ஊடாகவே நீதியையும் தீர்வையும் காண்பதற்கு முயற்சிக்கின்றோம். எமது நம்பிக்கையை முன்னுதாரணமாக போராட்டக்காரர்கள் கொள்ள வேண்டும் என்று கோருகின்றேன் - என்றார். (ஐ)

## 240 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது!

கொழும்பு, மே 09

இலங்கைக்கு தெற்கே 630 கடல் மைல் தொலைவில் பயணித்த படகொன்றிலிருந்து ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் 240 கிலோகிராம் எடையுடைய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அந்தப் படகில் பயணித்த வெளிநாட்டவர்கள் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடற்படை மற்றும் பொலிஸின் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போதே ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் பொருளுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்தது. (ஐ)



## மஹரகம - நாவின்ன வீதியை மறித்து மக்கள் போராட்டம்!

கொழும்பு, மே 09

கொழும்பு, மஹரகம - நாவின்ன - அதிவேக வீதியில், எரிவாயு வழங்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

நாவின்ன பிரதேசத்தில் நேற்று காலை முதல் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து எரிவாயு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், அதிவேக வீதி, நாவின்ன சந்தி மற்றும் விஜேராம சந்தி ஆகிய பகுதிகள் முடக்கப்பட்டன.

## பாடசாலை மைதான விவகாரம்

# புதுக்காட்டு சந்தியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, மே 09

கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்குரிய காணியில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதை யடுத்து பிரதேச மக்கள் தாளையடி - புதுக்காட்டு சந்தி வீதியை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தின் பயன்பாட்டில் இருந்து வந்த பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை தனியார் ஒருவர் வெளிநாட்டில் உள்ள ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இதையடுத்து குறித்த விளையாட்டு மைதானத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்பில் விசாரணை நடத்தியபோதே காணி விற்பனை செய்யப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானம் பாடசாலைக்குரியதாக உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து தாளையடி - புதுக்காட்டு சந்தி வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.05.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், சித்திரை 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# விகாரை அரசியல்?

பதவி விலகவுள்ளதாகக் கூறப்படும், பிரதமர், மஹிந்த ராஜபக்ஷ, அநுராதபுரத்திலுள்ள புகழ்பெற்ற ருவன் வெலிசாய மற்றும் மகாபோதி விகாரை ஆகியவற்றில் வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, ருவன் வெலிசாயவில், தனது பதவிப் பிரமாணத்தை, பிக்குகள் புடைசூழ மேற்கொண்டிருந்தார். பௌத்தத்தின் புதிய காவலனாக தன்னை முன்னிறுத்தும் நோக்கிலேயே, கோட்டாபய ராஜபக்ஷ, அநுராதபுரத்தில் பதவிப் பிரமாணத்தை செய்திருந்தார்.

நெருக்கடிகள் ஏற்படுக்கின்றபோது, விகாரைகளில் தஞ்சமடைவது, தென்னிலங்கை அரசியலில் வாழையடி, வாழை கலாசாரமாகும். இதேவேளை, எவ்வாறான நெருக்கடிகளையும், அதீதபௌத்த விசுவாசத்தை முன்னிறுத்துவதன் மூலம், எதிர்கொள்ளலாம் என்பதும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் வாழையடிவாழை நம்பிக்கையாக இருந்திருக்கின்றது.

தென்னிலங்கையின் அதிகார அரசியலுக்கும் பௌத்தத்துக்கும் பிரிவிக்கவியலாத, பந்தமுண்டு. இதன் காரணமாகவே, பிறப்பால், கிறிஸ்தவர்களான சிங்கள அரசியல் தலைவர்கள் பலர், பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டனர். பௌத்தத்துக்கு அதிகம் விசுவாசமானவர்கள் யார் - என்பதில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் போட்டி போட்டுக்கொள்வதுண்டு. அது ஒரு வகையில் நடிப்பாக இருந்தாலும்கூட, அந்த நடிப்பு அவர்களது அரசயலில் ஒரு பலமான முதலீடாகும். இதற்கு எவருமே விதிவிலக்கல்ல. இதற்கு எவரேனும் விதிவிலக்காக இருந்தால், அவரால் தென்னிலங்கை அதிகார மையத்தை வெற்றியாளராக அலங்கரிக்க முடியாது.

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான அலையொன்று பரவிவருகின்ற சூழலில்தான், மஹிந்த ராஜபக்ஷ அநுராதபுர விகாரைக்குள் அபயம் தேடுகின்றார். விகாரைக்குள்ளிருந்து, மீண்டெழ ஏதெனும் வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்று தேட முயற்சிக்கின்றார். ருவன் வெலிசாயவில் தனது பதவி பிரமாணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷவை, பதவி விலகுமாறு கோரியே, சிங்கள மக்கள் தொடர்ந்தும் வீதிகளில் நிற்கின்றனர். இதனை எதிர்கொள்வதற்கு, உபாயங்களற்று, தடுமாறிக் கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, விகாரைகளை நோக்கி செல்வதன் மூலம், சிங்கள மக்களை வசப்படுத்த முயற்சிக்கின்றார் போலும்.

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நாட்டை மீட்பதற்கு, வழயில்லாது தடுமாறிக் கொண்டிருக்கும் அரசாங்கம், இப்போது, அரசியல் நெருக்கடிக்குள்ளும் சிக்கவிட்டது. ஒரே நேரத்தில் இரு பிரச்னைகளைக் கையாள வேண்டிய நெருக்கடிக்குள் ராஜபக்ஷக்கள் சிக்கியிருக்கின்றனர். மக்கள் அனைவருமே பாரபட்சமில்லாமல் மோசமான பொருளாதார சுமைகளை சுமந்து கொண்டிருக்கும் நிலையில், பௌத்த மதபீடமும் ஆட்சியாளர்களுக்கு ஆதரவான நிலையில் இல்லை. ஏனெனில், பௌத்த அதிகார மையத்தை பேணிப் பாதுகாப்பதற்கு சிங்கள- பௌத்த மக்கள் தேவை. சிங்கள- பௌத்த மக்கள் வீதிகளில் நிற்கும் போது, அதற்கு மாறான பாதையில் பௌத்த மதபீடங்கள் சிந்திக்கவோ, செயல்படவோ முடியாது.

இந்த நிலையில் வழமையாக, பிக்குகளை கவசமாகக் கொண்டு, தப்பிக்கும் அரசியலும் ராஜபக்ஷக்களுக்கு பெரிதாக இம்முறை கைகொடுத்ததாகத் தெரியவில்லை. ஞானசார தேரர் போன்றவர்களின் குரல்கள் முற்றிலுமாக காணாமல் போய்விட்டது. ஏனெனில், பொருளாதார நெருக்கடிக்கு “புத்தம் சரணம் கச்சாமி“ பயனளிக்காது. அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதில் முன்னின்று செயல்பட்ட பல முன்னணி பிக்குகள், தற்போது, அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்க்கின்றனர். விகாரை அரசியல் முன்னரைப் போல் பலமாகவே இருக்கின்றது. ஆனால், அதனை தங்களை பாதுகாப்பதற்கு ராஜபக்ஷக்களால் பயன்படுத்த முயுமா என்பதில்தான், பிரச்னையுண்டு.

# இனவாதத்துக்கு அப்பாவி சிங்கள மக்கள் ‘பலிக்கடா’ க்களானதை உணர்த்தும் கொழும்பு ஆர்ப்பாட்டங்கள் !

அலசுவது இராஜதந்திரி

இலங்கையில் ஐந்து வார காலத்தில் இரண்டாவது தடவையாக அவசர காலச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. முதலாவதாக மிரிஹானையில் அமைந்துள்ள ஜனாதிபதியின பிரத்தியேக இல்லத்துக்கு முன்பாக ஏப்ரல் முதலாந்திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தையடுத்து அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்து ஏப்ரல் 14ஆம் திகதி வரை நீடித்திருந்தது. இதன்பின்னர் தறபோது இரண்டாவது தடவையாக அவசரகாலச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானை இல்லத்துக்கு எதிரே ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஆரம்பமான ஆர்ப்பாட்டம் காலிமுகத்திடல் வரை நீடித்து பின்னர் பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகை வரை சென்று தற்போது கோட்டே சிறீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றம் வரை பரவியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களை கோட்டே சிறீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றிலிருந்து பிரதான வீதி வழியே செல்ல விடாது ஆர்ப்பாட்டக்கார்கள் பலத்த பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செயது தடுத்திருந்தனர்.

அப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் பாராளுமன்ற வீதி வழியாக போய்வர ஆர்ப்பாட்டகாரர்கள் அனுமதித்திருந்தனர்.

அத்துடன், ஒரு மாதத்துக்கு முன்னர் சிலாபத்திலும் அரசாங்கத்துக்கு எதிராக வீதி மறியல் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றபோது அந்தவழியே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்திருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை மட்டும் கொழும்பு செல்ல அனுமதித்திருந்தனர்.

இதுதவிர, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தொலைக்காட்சி அறிவிப்பாளராக இருந்து பின்னர் படையினரால் முள்ளிவாய்க்காலில் கைதாகி மோசமான முறையில் கொல்லப்பட்ட இசைப்பிரியாவின் உருவப்படத்தைக்கூட காட்சிப்படுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அனுமதித்திருந்தனர்.

அத்துடன், அவ்வப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனைப் பாராட்டியும் கோஷங்கள் எழுப்பப்பட்டதையும் அறிய முடிந்தது. வடக்கு - கிழக்கின் மூன்று தசாப்தகால யுத்த நெருக்கடி நிலைமையில்கூட தென்னிலங்கையில் காணப்பட்டிராத பொருளாதார நெருக்கடியே தற்போது காணப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்களிடையே குறிப்பிடப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களின் “கோட்டா கோ கம“ கற்பனைக் கிராமத்துக்கு விஜயம் செய்தபோது அவருக்கு நல்ல வரவேற்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் வழங்கியதோடு கம்பவாரிதியோடு சென்றிருந்த அந்தணர்களிடம் விபூதி பெற்று ஆசியையும் பெற்றுக்கொண்டனர்.

கூடவே, தமிழில் கம்பவாரிதி பேசியதையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கரகோஷத்தோடு வரவேற்றிருந்தனர். இவை யாவற்றுக்கும் மேலாக தமிழில் இலங்கையின் தேசிய கீதத்தையும் அவர்கள் பாடியிருந்தனர்.


காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தை பொறுத்தவரை குறுகிய இன, மத பிரதேசவாதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் சிந்திக்கத்தெரிந்த இன்றைய தென்னிலங்கை தலைமுறையினர் அரசியல் நெருக்கடிகளுக்கு மட்டுமல்ல. பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணமான அரசியல்வாதிகளின் முகத்திரைகளை கிழித்தெறியும் விதத்தில் நடந்து கொள்வதையே அவதானிக்க முடிகின்றது.

காலிமுகத்திடல் கோட்டா கோ கம கற்பனைக் கிராமத்தில் தமிழில் இலங்கையின் தேசிய கீதம் பாடப்பட்டமை ஒரு வித்தியாசமான செய்தியை வழங்கும் என்று அங்கே வந்திருந்த பௌத்த பிக்கு ஒருவர் குறிப்பிட முற்பட்டார். ஆனால், அந்த பௌத்த பிக்கு நையப்புடைக்கப்படாத குறையாக காலிமுகத்திடல் கோட்டா கோ கம கற்பனைக் கிராமத்திலிருந்து வெளியேறறப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கோட்டா கோ கம போரட்டக்காரர்கள் வெறுமனே அரசின் தவறான பொருளாதரா கொள்கை மற்றும் ஊழல், மோசடிகளை மட்டும் உலகறிய வைக்கும் விதத்தில் தமது போராட்டங்களை நடத்தாது, இனத்துவேசம் எவ்வாறு இந்த நாட்டில் புரையோட வழியமைக்கப்பட்டிருந்தது என்பதை சுட்டிக்காட்டும் விதத்திலும் நடந்து கொள்கின்றனர்.

காலிமுகத்திடலிலும் தற்போது பல்வேறு இடங்களிலும் ஆர்பாட்டங் களில் குதித்துள்ள தென்னிலங்கையின் இன்றைய தலைமுறையினரை நோக்கும் போது காலனித்துவ விழுமியங்களுடன் அரசியல் நடத்திய அன்றைய தென்னிலங்கை அரசியல் வாதிகள் எவ்வளவு ஆழமாக அப்பாவி சிங்கள் மக்களிடம் இனவாத விஷ விதைகளை விதைத்துள்ளனர் என்பதையே அறிய முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 09 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 26
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அஷ்டமி




**மேடம்**
பொழுதுபோக்கு, கேளிக்கைகளில் இன்று பொழுதைக்கழிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் சில நெருக்கடி தோன்றும்.கவனக்குறைவால் சில இழப்பு உண்டாகும். மனஅழுத்தம் வேண்டாம்.

**இடபம்**
உறவினர்கள் வருகை, விருந்து என்று மகிழ்வீர்கள்.உங்களுடைய நீண்டநாள் எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும்.ஆலய தரிசனம், குலதெய்வ வழிபாடு செய்து வருவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஒருவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவுகளின் ஆதரவால் நினைத்ததை அடைவீர்கள்.குடும்பத்தில் திருப்தியான நிலை உண்டாகும்.

**கடகம்**
உங்கள் மனம் சொல்கிறபடி செயல்பட்டு மகிழ்வீர்கள்.உங்களுக்கு புதிய சிந்தனை மேலோங்கும். நீங்கள் எதிர்பார்த்த வெற்றியை இன்று அடைவீர்கள்.

**சிம்மம்**
உறவினர்களுடன் இருந்து வந்த பிரச்னை விலகும்.மனதிற்குப் பிடித்த செயல்களில் ஆர்வமாக ஈடுபடுவீர்கள்.துணிச்சலுடன் ஒரு செயலில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்துவது பற்றி ஆலோசிப்பீர்கள். இதுவரையில் இழுபறியாகவே இருந்து வந்த பிரச்னை முடிவிற்கு வரும்.

**துலாம்**
வேற்றுமொழி நண்பர்களால் சந்தோஷம் உண்டாகும்.உங்கள் கவனக்குறைவால் சில பிரச்னைகளை எதிர்கொள்வீர்கள்.தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட சங்கடங்கள் ஒரு முடிவிற்கு வரும்.தாய்வழியில் இருந்து தகவல் வரும்.நட்பு வட்டம் விரிவடையும்.சகோதரர்களின் துணையுடன் நினைத்ததை அடைவீர்கள்.

**தனுசு**
நெருக்கடியில் இருந்து இன்று சாமர்த்தியமாக மீண்டு வருவீர்கள்.அலைச்சல், வீண் விரயம் ஏற்பட்டாலும் நன்மை ஏற்படும்.காத்திருந்த செயலில் ஏமாற்றம் ஏற்படும். விழிப்புணர்வு தேவை.

**மகரம்**
உற்சாகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை உண்டாகும்.நண்பர்களின் ஆலோசனையால் புது முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்**
எதிரிகளால் உண்டான பிரச்னை தீரும்.நிம்மதி ஏற்படும் நாள்.நினைத்ததை சாதிப்பதற்காக புதிய வழிமுறைகளைக் கையாளுவீர்கள்.உடல் நலனில் கவனம் தேவை. தர்ம சிந்தனை அதிகரிக்கும்.

**மீனம்**
படிப்பு, திருமணம் என்ற முயற்சியில் ஈடுபடுவீர்கள். தந்தைவழி உறவுகளுடன் இருந்த பிரச்சனைகள் விலகும்.பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த செயல்களில் யோசிப்பீர்கள்.

# தமிழ்நாடு சட்டப் பேரவையை மகாபலிபுரத்துக்கு மாற்ற முயற்சி!

*பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை*

சென்னை, மே 09

**தமிழக சட்டப் பேரவையை மகாபலிபுரத்துக்கு மாற்றுவதற்கான வேலைகளை தி. மு. க. அரசு தொடங்கி உள்ளதாக தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.**



மேலும், தமிழக சட்டப் பேரவையை மகா பலிபுரத்துக்கு மாற்றுவதற்காக அங்கு 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வாங்கி, அதற்கான பணிகளை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

அங்கு புதிய சட்டப் பேரவையை அமைக்க முயற்சி செய்கின்றனர்.மேலும், அங்கே அலுவலகம் திறப்பதற்காக தி. மு. க. இடம் வாங்கியுள்ளது.

6 அமைச்சர் களின் பினாமி பெயரில் மகாபலிபுரம் பகுதியில் நூறு ஏக்கர் நிலம் வாங்கியுள்ளனர் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

# 445 கிராமங்களில் இன்றும் தீண்டாமை வன்கொடுமை!

மதுரை, மே 09

தமிழகத்தில் தீண் டாமை வன்கொடுமைகள் நிலவும் முதல் 10 மாவட் டங்களில் மதுரை மாவட்டம் முதலிடத்தில் உள்ளதாக, மதுரையைச் சேர்ந்த “த பக்ற்“ (THE FACT) தரவுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் தீண்டாமையைக் கடைப் பிடிக்கும் கிராமங்களின் எண்ணிக்கை மொத்தம் 445 என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக முதல் இடத்தில் மதுரை மாவட்டத்தில் 43, இரண்டாம் இடத்தில் விழுப்புரம் 25 கிராமங்கள், அதற்கு அடுத்தடுத்த இடத்தில் திருநெல்வேலி 24, வேலூர் 19, திருவண்ணாமலை 18 என்கிற வரிசையில் இடங்களை பிடித்துள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஒப் பீட்டளவில் குறைந்துள்ளதாகவும் தி பக்ற் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# இலங்கைக்கு நிவாரண திட்டம் தனது சேமிப்பை அளித்த சிறுமி!

இராமநாதபுரம், மே 09

தமிழகத்தின் 8 வயதேயான சிறுமி உண்டியலில் சேமித்த 4400 இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 20 ஆயிரம் ரூபாயை இலங்கை நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளார்.

இராமநாதபுரம் - கீழக்கரையை சேர்ந்த 3 ஆம் வகுப்பு மாணவியான பிஸ்லா சார என்ற சிறுமியே இவ்வாறு தனது சேமிப்பு பணத்தை வழங்கியுள்ளார். அவரின் இந்த செயலுக்கு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கல் லால் குமாவத் பாராட்டு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவித்துவரும் இலங்கைக்கு நிவாரணமளிக்க தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நிவாரண திட்டத்தை அறிவித்தார். இதற்காக நிவாரணமளிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.




அவரின் இந்தத் திட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்நிலையிலேயே குறித்த சிறுமி தனது சேமிப்பு பணத்தை மாவட்ட ஆட்சியரிடம் கையளித்துள்ளார். (ஐ)

# 7ஆவது நாளாகவும் முருகனின் உண்ணாவிரதம் தொடர்கிறது!

வேலூர், மே 09

நளினியின் வேண்டுகோளை ஏற்க மறுத்து வேலூர் சிறையில் நேற்று 7ஆவது நாளாகவும் முருகன் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன் வேலூர்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் தன்னை பரோலில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டபோது அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.



இதனால் விரக்தியடைந்த அவர் பரோல் கிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார். தொடர்ந்து போராடி வரும் அவரை நேற்று முன்தினம் அவரின் மனைவி நளினி சந்தித்து பேசினார்.

இதன்போது நளினி அவரிடம் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டார். ஆனால், அவரின் வேண்டுகோளை ஏற்க முருகன் மறுத்துவிட்டார். இந்நிலையில், அவர் நேற்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்து உண்ணாவிரதத்தை தொடர்ந்தார். (ஐ)

# எதிர்ப்புகளுக்கு மத்தியில் விகாரை; இராணுவ தளபதி நேரில் ஆராய்வு!

யாழ்ப்பாணம், மே 09

**வலி. வடக்கின் தையிட்டியில் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டு வரும் திஸ்ஸ ரஜமஹா விகாரையை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.**

பலாலி யாழ்பாணம் படைத் தலைமையகத்துக்கு நேற்று காலை வருகை இராணுவத் தளபதி, விகாரைக்குச் சென்று கட்டுமானப் பணிகளை நேரில் ஆராய்ந்தார்.

வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன் கட்டுமானப் பணிகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும், கடும் எதிர்ப்பையும்மீறி காங்கேசன்துறை திஸ்ஸ ரஜமஹா விகாரைக்கு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டது.

விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் விகாரையின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் இராணுவத் தளபதி என்றுகள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். (ஐ)



## இலஞ்ச குற்றச்சாட்டு; 3 பொலிஸார் மாற்றம்!

யாழ்ப்பாணம், மே 09

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்சம் பெற்று வந்த குற்றச்சாட்டில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமொன்றை இலஞ்சம் பெற்றுக் கொண்டு விடுவித்தனரென அவர்கள் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

வாகன உரிமையாளர் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊர்காவற்துறை, நெடுந்தீவு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

## 25,000 ரூபாய் பணத்துடன் பூசகரின் பை அபகரிப்பு!

தென்மராட்சி, மே 09

25 ஆயிரம் ரூபாயுடன் பூசகரின் பையை இருவர் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மீசாலை - தட்டான்குளம் பிள்ளையார் ஆலய பூசகரிடமே இவ்வாறு வழிப்பறி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூசகர் பணப் பையுடன் நேற்று முன்தினம் ஆலயத்துக்கு சென்றுள்ளார். ஆலய பூட்டை அவர் திறக்க முற்பட்ட போது அங்கு நின்ற இருவர் அவரின் பையைப் பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூசகரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாண சிறைச்சாலையில் மறியலில் இருந்த கைதி மரணம்!

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தாரென சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன.

அம்மன் கோவில் வீதி உடுவில் பகுதியைச் சேர்ந்த யோகராசா ஜெயக்குமார் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

மதுபோதையில் குடும்பத் தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, கடந்த 24ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்றுமுன்தினம் சுகயீனம் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகளால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அடிப்படை வசதி இன்மையால் நெடுந்தீவு மக்கள் இடப்பெயர்வு!

யாழ்ப்பாணம், மே 09

அடிப்படை வசதிகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் இன்மையால் பூர்வீகமாக நெடுந்தீவில் வாழ்ந்த மக்கள் பலர் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் மிகவும் பழமையான தீவுகளில் ஒன்றான நெடுந்தீவில் போதிய வசதிகள் இன்மை மற்றும் தொழில் வாய்ப்புக்கள் இன்மையால் பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

குறிப்பாக, நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டி வீட்டுத்திட்டம், நெடுந்தீவு கிழக்கு 12ஆம், 13ஆம் வட்டாரங்களை சேர்ந்த மக்களே அண்மைக் காலமாக அதிகளவில் வெளியேறி வருகின்றனர்.

ஒரு பகுதி மக்கள் வெளியேறி வருகின்றபோதிலும், வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் மக்களே தற்போது நெடுந்தீவில் வாழ்கின்றனர். இவர்கள் போதிய வருமானங்களின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## துணை தூதுவர் தீவு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி!

### இந்திய துணைத் தூதரகம் கண்டனம்!

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளுக்கு செல்வதற்காக இந்திய துணைத் தூதுவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை கேட்குமாறு கூறியமை சர்ச்சையாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளுக்கு யாழ். இந்திய துணைத் தூதுவர் அண்மையில் சென்றார். இதற்காக அவர் கடற்படையின் யாழ். மாவட்ட தளபதியிடம் அனுமதி கோரியிருந்தார்.

ஆனால் அவர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்று வருமாறு கூறியுள்ளார். அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று அவர் அந்தத் தீவுகளுக்கு சென்றுள்ளார்.

இந்த விடயம் குறித்து இந்திய துணைத் தூதுவர் அதிருப்தி வெளியிட்டிருந்தார். சாதாரண சுற்றுலா பயணிகள் செல்லும் இடத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறுமாறு கூறியமை தவறு என்று அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், இதற்கு பதிலளித்துள்ள கடற்படை, சுற்றுலாப் பயணிகள் சாதாரண பயணிகளின் படகில் சென்று வருகின்றனர். இந்திய அதிகாரிகள் இலங்கை கடற்படையின் படகில் செல்லவே அவர்களை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறுமாறு கூறப்பட்டது - என்று கூறியுள்ளது. (ஐ)

## மன்னார் சோதனை சாவடி தொடர்பில் மாவட்ட இராணுவ தளபதியுடன் பேச்சு!

மன்னார், மே 09

மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகள் தொடர்பாக மன்னார் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன விஜயசேகரவுடன் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசியது.

இந்த விடயம் தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் எஸ். சிவகரன் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் தகவல் அளித்தார்.

அதில், மன்னார் மாவட்டத்தில் அமைக் கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடி களால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து மன்னார் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன விஜய சேகரவை தள்ளாடியில் சந்தித்து பல விடயங்களை எடுத்துக் கூறினோம்.

மன்னார் மாவட்டத்தில் யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் 16 சோதனைச்சாவடிகள் போதைப் பொருள் தடுப்பு எனும் போர்வையில் மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்துகின்றன.

இவற்றை அகற்றுமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் தீர்வின்றி தொடர் கின்றன அரச உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எந்த தடையும் இன்றி பயணிப்பதால் சாமான்ய மக்களின் அவல நிலை புரிவதில்லை.

போதைப்பொருள் தடுப்பு எனும் கார ணத்தை வைத்து மன்னார் நுழைவாயிலில் உள்ள சோதனைச் சாவடி சாதாரண பொது மக்களின் அன்றாட வாழ்வியல் செயல்பாட்டில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துவதுடன் அரச, தனியார் பணியாளர்கள் குறித்த நேரத்திற்கு கடமைக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுவதுடன் பொருட்களை இறக்கி ஏற்றுவதால் செலவு அதிகரிப்பதுடன் நேர விரயமும் ஏற்படுகிறது. பயணிகளை சோதனையிடும் இராணுவத்தினர் மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றனர் என்றும் தெரிவித்தோம்.

இதற்கு பதிலளித்த மாவட்ட இராணுவ தளபதி, சாதாரண பயணிகள் போக்குவரத்தை இலகுபடுத்துவதாகவும் அடையாள அட்டை பரிசோதனையை நிறுத்துவதாகவும் , பொருட்கள் இறக்கி ஏற்றுவதற்கு மாற்றுவழிகள் மேற்கொள்வதாகவும். காலையில் வேலைக்கு செல்லும் அரச, தனியார் பணியாளர்களை விரைந்து விடுவிப்பதாகவும் தமிழ் பேசக்கூடிய இராணுவத்தினரை அதிகம் சோதனைச்சாவடி யில் கடமையில் ஈடுபடுத்துவதாகவும் கூறினார்.

இந்த சந்திப்பில் மனித உரிமை செயல்பாட் டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் அடிகளார் , மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் பத்திநாதன் உட்பட சில பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொணடனர். (ஐ)

# அவசரகாலசட்டம்பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி முழுமையான எதிர்ப்பு



**கொழும்பு, மே 09**

**நாட்டில் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி முழுமையான எதிர்ப்பை வெளியிடுவதாக கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயல்படவுள்ளதாக அறிவித்துள்ள சிறீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை நேற்று சந்தித்தன.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்துரைத்துள்ள அவர்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் கூடிய அரசியல் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக எவ்வாறு செயல்படுவது என்பதுத் தொடர்பிலேயே சட்டத்தரணிகள் சங்கத்துடன் நாம் கலந்துரையாடலில் ஈடுபட்டோம்.

இந்தக் கலந்துரையாடலானது மிகவும் வெற்றியளித்துள்ளது. எதிர்காலத்திலும் நாம் பல அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு சட்டத்தரணிகள் சங்கத்திடம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு முன்னோக்கி பயணிப்பதுத் தொடர்பிலேயே ஆராய்ந்து வருகின்றோம்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பிலான யோசனையை நாம் ஏற்கெனவே முன்வைத்துள்ளோம். அவசரகால சட்டம் பிரடகனப் படுத்தப்பட்டுள்ளமைக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தங்களது முழுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றது.

பாராளுமன்றத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப்படுமாயின் நாங்கள் எமது முழுமையான எதிர்ப்பையே பாராளுமன்றத்திலும் வெளியிடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஆமர் வீதியில் மக்கள் போராட்டம் நேற்றும் தொடர்ந்து முன்னெடுப்பு

கொழும்பு, மே 09

நாடளாவிய ரீதியில் எரிவாயு, மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அதை இலகுவாக பெற நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கொழும்பு ஆமர் வீதியை வழிமறித்து நேற்று முன்தினம் ஆரம்பித்த போராட்டம், இரண்டாவது நாளாகவும் நேற்று தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தால், கொட்டாஞ்சேனையிலிருந்து சுமணமாவத்தைக்கு செல்லும் வீதி, கொட்டாஞ்சேனையிலிருந்து சங்கராஜமாவத்தைக்கு செல்லும் வீதி, வத்தளையிலிருந்து புறக்கோட்டைக்கு செல்லும் வீதி, புறக்கோட்டையிலிருந்து வத்தளைக்கு செல்லும் வீதி, கிராண்ட்பாஸுக்கு செல்லும் வீதி என்பன மூடப்பட்டுள்ளன.

இதனால், பஞ்சிகாவத்தை, மருதானை, பொரளை ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளுக்கு பயணிக்கும் வாகனங்களை வழிமறித்து திருப்பியனுப்பும் செயல்பாட்டில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான வீதியில் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்தும் பிரதான வீதியில் விறகு அடுப்பை மூட்டியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“ஏனைய இடங்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் செல்கின்றன எனினும் எமக்கு எரிவாயு சிலிண்டர்கள் கிடைக்கவில்லை. இதனால் சமைப்பதற்கு வழியில்லாமல் உள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஒட்டுமொத்த அரசாங்கமும் வீட்டுக்குச் செல்ல வேண்டும்” உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பொலிஸார் கலந்துரையாடலில் ஈடுபட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (கே)

# பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவாக அலரி மாளிகை முன் போராட்டம்!

கொழும்பு, மே 09

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் அலரிமாளிகையில் கூடவுள்ளனர்.

இதேசமயம் “பிரதமர் மஹிந்தவை பாதுகாப்போம்” என பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் இன்று காலை அலரி மாளிகை முன்பாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பிரதமரின் பதவி விலகல் குறித்து பொதுஜன பெர முனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடு கையில்,

ஜனாதிபதி விடுத்த கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடி இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதுடன், கட்சியின் அடுத்தக்கட்ட நகர்வு குறித்து உறுதியான தீர்மானம் எட்டப்படும். சமூக கட்டமைப்பில் தோற்றம் பிரச்னைகளுக்கு தீர்வு பதவி விலகலை மையப்படுத்தியதாக அமையாது. பதவி விலகலை தொடர்ந்து அடுத்தக்கட்டமாக முன்வைத்துள்ள யோசனைகள் நடைமுறைக்கு பொருத்தமாக அமையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எவரும் விரும்பவில்லை. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பொதுத்தேர்தலை நடத்துவது சிறந்தாக அமையும்.

பிரதமர் பதவியில் இருந்து தான் ஒருபோதும் விலக போவதில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் முக்கிய தரப்பினர்களிடம் குறிப்பிட்டுள்ளார். சகல தரப்பினரின் கருத்துக்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் - என்றார்.

# 10 மணிநேர மின்வெட்டு; பொய் என்கிறது இ. மி. ச.

கொழும்பு, மே 09

எதிர்வரும் வாரம் முதல் நாட் டின் சகல பகுதிகளிலும் 10 மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென இலங்கை மின்சார சபை (இ. மி. ச.) அறிவித்துள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் பரவி வருகின்றன.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் அன்ட்ரூ நவமுனி, “இந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. இதுவரையில் இலங்கை மின்சார சபையால் அவ்வாறான தீர்மானம் எடுக் கப்படவில்லை”, என்று தெரிவித்தார்.

அத்துடன், தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் அவற்றுக்கான தீர்வு குறித்து கலந்துரையாடப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# இந்த மாத இறுதியில் யூரியா வழங்கப்படும்

## விவசாய இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, மே 09

நெல் செய்கைகளுக்கு தேவையான யூரியா உரத்தை, இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

65,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தையும் 38,500 மெட்ரிக் தொன் ஏனைய உரங்களையும் உடனடியாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய கடனுதவியின் கீழ் யூரியா உரத்தையும் விநியோகஸ்தர் ஒருவருக்கூடாக வர்த்தக உர நிறுவனத்தினூடாக ஏனைய உரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் உரத்தை, நிவாரணம் அடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை நெல் செய்கைக்காக இரசாயன உரத்துடன் இயற்கை உரத்தையும் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் 70,000 மெட்ரிக் தொன் காபனிக் உரமும் 25 லீற்றர் காபனிக் திரவ உரம் என்பவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த செய்கையின் போது ஏற்பட்ட இழப்பீட்டுக்கான நட்டஈடு வழங்கும் நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஐ)

# மஹிந்த அமரவீர வீட்டின் முன்பாக மலர்வளையம் வைத்து போராட்டம்!

கொழும்பு, மே 09

முன்னாள் அமைச்சரான மஹிந்த அமரவீரவின் வீட்டுக்கு முன்பாக மலர் வளையம் வைத்து பொதுமக்கள் ஆர்ப் பாட்டம் நடத்தியுள்ளனர்.

அங்குனுகொலபெலஸவில் உள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர வின் வீட்டிற்கு முன்பாகவே பொதுமக் கள் மலர் வளையம் வைத்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிய வருகின்றது.

பணிப் புறக்கணிப்புக்கு ஆதரவாக அங்குனுகொலபெலஸ நகரில் இருந்து கறுப்புக் கொடி ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்ற பொதுமக்கள் சிலரே மஹிந்த அமர வீரவின் வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் என வலியுறுத்தியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# மக்கள் பணம் கொள்ளை; உரிய தண்டனை அவசியம்

## மரிக்கார் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மே 09

மக்களின் பணத்தில் விளையாடியவர்களுக்கு உரிய பதிலை வழங்காவிட்டால் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வருபவர்களும் மக்கள் பணத்தை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் செல்லக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பார்க்கிர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், நாம் வரலாற்றில் என்றும் எதிர்கொள்ளாத ஒரு நெருக்கடியை இன்று எதிர்கொண்டு வருகின்றோம். மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது. நாட்டு மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொடுக்க முடியாதளவு இந்த அரசாங்கமானது அசமந்தம் அடைந்துள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஜனாதிபதியும் அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும். தனது கைகளால் தவறிழைக்கப்பட்டு விட்டத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். விவசாயத்துறையில் தான் எடுத்த தீர்மானத்தினால் விளைந்த விளைவுகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் அரசாங்கம் தற்போது தமது தவறுகளை ஏற்றுக்கொண்டுள்ளது. தவறிழைக்கப்பட்டதை நிதி அமைச்சரும் பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். மன்னிப்புக் கோருகின்றனர். மன்னிப்புக் கோருவதால் பிரச்னைகள் தீர்ந்துவிடுமா?

நாட்டு மக்களின் பணத்துடன் விளையாடியுள்ளார். இதற்கு யார் பொறுப்பளிக்க வேண்டும். மக்களின் பணத்தில் விளையாடியவர்களுக்கு உரிய பதிலை வழங்காவிட்டால் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வருபவர்களும் மக்களின் பணத்தை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் செல்லக்கூடும்.

நாங்கள் தற்போது எதிர்க் கட்சியில் இருப்பதற்கு தயார் என்று பிரதமர் கூறுகின்றார். சந்தர்ப்பவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். தவறான கொள்கைகள், தீர்மானங்களால் நாடு அதலபாதாளத்துக்கு சென்றுவிட்டது. இதிலிருந்து அவர்களால் விரைவில் தப்பிவிட முடியாது - என்றார். (கே)

# காலிமுகத்திடல் போராட்டம் இன்றுடன் ஒருமாதம் பூர்த்தி!

கொழும்பு, மே 09

**கொழும்பு - காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தியடைகிறது. எனினும், தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு காலிமுகத்திடலில் கடந்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான இளைஞர் தன்னெழுச்சிப் போராட்டம் இரவு -பகல் பாராது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் காலிமுகத்திடலின் இரு பகுதிகளிலும் கூடாரங்களை அமைத்து அதில் இரவு பொழுதை கழிப்பதுடன் அவர்களுக்கான உணவு உள்ளிட்ட உதவிகளை தன்னார்வ அமைப்புகள் வழங்கி வருகின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். நாடளாவிய ரீதியில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனையும் பொருட்படுத்தாது கொழும்பு காலிமுகத்திடல் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஒட்டுமொத்த அரசாங்கமும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த இளைஞர் தன்னெழுச்சிப் போராட்டத்தில் தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்ட அரசியல் சார்பற்ற அமைப்புகள் கைக்கோர்த்துள்ளன. இந்நிலையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும் பாடல்களை பாடியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

“சிங்களம், தமிழ், முஸ்லிம்களாகிய நாம் ஒரு தாயின் பிள்ளைகள்”, “ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு செல்ல வேண்டும்“, “இது எமது நாடு” உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கே)

# இடைக்கால அரசாங்கத்தை அமைக்க சஜித், அநுரவுக்கு சுதந்திர கட்சி அழைப்பு!

கொழும்பு, மே 09

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு சர்வ கட்சிகளை உள்ளடக்கியஇடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலுக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழங்க முடியுமான சிறந்த தீர்வாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கொள்கை ரீதியிலான அரசியல் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக ஓர் அறிவார்ந்த கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும் என சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் நிலவும் நெருக்கடியை தீர்ப்பதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த ஆலோசனைக் கோவையை அடிப்படையாகக் கொண்ட தேசிய வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது. (ஐ)

# அநுராதபுரம் சென்ற பிரதமருக்கு பொதுமக்கள்கூடி கடும் எதிர்ப்பு!

கொழும்பு, மே9

மதவழிபாட்டுக் காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அநுராதபுரத் துக்கு சென்றார். அவரின் வருகைக்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர்.



அநுராதபுரம் சிறீ மஹாபோதி, மிரிஸவெட்டி, ருவன் வெலிசாய ஆகிய விகாரைகளில் வழிபாடாற்றவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சென்றிருந்தபோது அங்கு அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் நகரில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் தரப்பினர், ருவன்வெலிசாயவுக்கு அருகில் வைத்து பிரதமருக்கு தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

அதன் பின்னர் மிரிஸவெட்டி விகாரைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சென்ற போது அங்கும் பிரதமருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் பிரதமர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

பிரதமரின் வாகன பேரணி சென்ற போது வீதியில் குழுமியிருந்த ஆதரவாளர்கள் ஹூ சத்தம் எழுப்பியதுடன், அரசாங்கத்துக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

“நாட்டை சீரழித்துவிட்டனர் நாம் இரத்தம் சிந்துகின்றோம்” உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் விகாரையொன்றுக்கு சென்ற போது வழிபாட்டுக்காக வருகை தந்திருந்தவர்கள் பிரதமருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கருத்துக்களை கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (கே)

# எரிபொருள் தரத்தில் சிக்கலா? உடன் முறைப்பாடு செய்யுங்கள்!

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, மே 09

பாவனையாளர்களின் முறைப்பாடுகளுக்கு அமைய பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளின் மாதிரிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுயாதீன குழுவினரால் பரிசோதிக்கப்படவுள்ளன.

எரிபொருளின் தரம் தொடர்பில் ஏதேனும் சிக்கல் காணப்படுமாயின் பாவனையாளர்கள் **011 523 4234 , 011 545 5130** என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் முறைப்பாடு செய்ய முடியும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், எரிபொருளின் தரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகிய காணொலியை அடிப்படையாகக் கொண்டு குருநாகல், நாரம்மல ஆகிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருளை விநியோகித்த எரிபொருள் பௌஸர் கொலன்னாவை எண்ணெய் சேமிப்பு நிலையத்தின் ஊடாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் பௌஸர் நாரம்மல எரிபொருள் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பதாக தம்பதெனிய பிரதேசத்தில் உள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 92 ஒக்டென் ரக பெற்றோலை கொண்டு சென்றுள்ளது.

அவ்விரு நிரப்பு நிலையங்களில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் மாதிரிகளை கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எரிபொருளில் எவ்வித இதர பொருட்களும் கலக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் 472 எரிபொருள் பௌஸர் ஊடாக 92 ரக ஒக்ரென் பெற்றோல் 60இலட்சம் லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது. எரிபொருளின் தரம் தொடர்பில் இதுவரை எப்பிரதேசங்களில் இருந்தும் முறைப்பாடு கிடைக்கப்பெறவில்லை.

எரிபொருள் முனையம் அல்லது எரிபொருள் களஞ்சிய சாலைகளில் இருந்து விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் தொடர்பில் முழுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எரிபொருள் பௌஸருக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் குறித்த வாகனத்தின் சாரதியுடன் எரிபொருளின் தரம் தொடர்பில் உறுதிப்பாடு எட்டப்படும் -என்றுள்ளது. (ஐ)

# இந்தி அரசியலின் உண்மையான பின்னணி

■ ஜி.என்.தேவி

ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கவிதை எழுதுவதற்கான சொற்களை 'இயற்சொல்', 'திரிசொல்', 'திசைச்சொல்', 'வடசொல்' என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் என்று தொல்காப்பியம் படைத்த தொல்காப் பியர் கூறியிருக்கிறார். வடசொல் என்றால் வட மொழிச் சொற்கள். இந்தச் சொற்கள் வடக்கத்திய ஒலிப் பண்புகளைத் துறந்துவிட்டுத் தமிழ் மொழியின் ஒலிப் பண்போடு ஒலித்தால்தான் தமிழில் பயன்படுத்த முடியும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

மொழிப் பற்று என்பது பண்டைய காலத்தில் இருந்தே திராவிடத் தனித்துவத்தின் அடிநாதமாக இருந்துவந்துள்ளது. பண்டைக் காலத்தில் பிராகிருத மொழி பேசிவந்தவர்களிடமும் இதே போன்ற உணர்வு காணப்பட்டது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பிராகிருத மொழியில்தான் மகாவீரர் தமது போதனைகளைச் செய்தார்.

18 நூற்றாண்டுகள் கழித்து ஜைன மதச் சான்றோரும் கவிஞரும் கணித மேதையும் தத்துவ ஞானியுமான ஆச்சார்ய ஹேமச்சந்திரா தன் காலத்தில் குஜராத் பகுதியில் சம்ஸ்கிருத மொழிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டுவந்த பிராகிருத மொழிச் சொற்களின் முக்கியத்துவம் குறித்து ஒரு கட்டுரை எழுதினார். அதன் மூலம் குஜராத்தி மொழிக்கு ஒரு புது வடிவத்தையும் அவர் கொடுத்தார். காந்தி சுயராஜ்ஜியம் பற்றிய தன்னுடைய சிந்தனைகளை 'ஹிந்த் ஸ்வராஜ்' நூலில் முன்வைத்தார். 1909ஆம் ஆண்டு அவர் எழுதிய இந்த நூலைத் தன் தாய்மொழியான குஜராத்தி மொழியில்தான் எழுதினார்.

இந்தியாவின் மொழி சார்ந்த உணர்வு என்பது சுயராஜ்யத்தின் ஒரு அம்சமாகவே இருந்துவந்துள்ளது. இந்தியாவின் எல்லா மொழிகளுக்கும் இது பொருந்தும்.

## அரசமைப்புச் சட்டத்தில் தெளிவு

இன்றைய இந்தியர் ஒருவருக்கு 2,000 ஆண்டுகள் பழமையான தொல்காப்பியத்தைப் பற்றியோ ஒன்பது நூற்றாண்டுகள் பழமையான தேசினமாமலாவைப் பற்றியோ தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் நியாயமே இல்லை. ஆனால், நமது குடியரசால் 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பது நியாயம் தானே?

இந்திய அரசமைப்புச் சட்டமானது இரு விஷயங்களை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது: முதலாவது, இந்தியா என்பது 'மாநிலங்களின் கூட்டமைப்பு' என்கிறது. இரண்டாவது, அரசமைப்புச் சட்டத்தை நாடு ஏற்றுக்கொள்ளும் போது மாநிலங்கள் இடையே தகவல் தொடர்புக்கென அதிகாரப்பூர்வமாக இருந்த மொழியே அவற்றுக்கிடையேயான தொடர்பு மொழியாகத் தொடரும் என்பதாகும்.

மாநிலங்கள் ஒப்புக்கொண்டால் மட்டுமே ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறலாம் என மொழிகள் தொடர்பான சட்டப் பிரிவுகள் தெளிவாகக் கூறுகின்றன. சட்டப் பிரிவு 344 (4)இல் மொழி தொடர்பான சட்டங்களை மேற்பார்வையிட 30 உறுப்பினர்கள் (20 நாடாளு மன்ற உறுப்பினர்களும் 10 மாநில சட்டமன்ற உறுப்பினர்களும்) கொண்ட குழுவை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொழி தொடர்பான விஷயங்கள் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகம் ஆகிய இரண்டு அமைச்சகங்களால் கையாளப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பொறுப்பு கல்வி, கலாச்சாரம் ஆகியவை தொடர்பானது. மத்திய-மாநில உறவைப் பாது காப்பது, மொழிவாரிச் சிறுபான்மையினரது மொழி உரிமைகளைப் பாதுகாப்பது, இந்தி மொழியைப் பரப்புவது ஆகியவை உள்துறை அமைச்சகத்தின் பொறுப்புகள். மற்ற மொழிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இந்தியைப் பரப்ப வேண்டும் என்றும் அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிட்டுள்ளது.

## ஏனைய மொழிகளை விழுங்கும் இந்தி

அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களின் பின்னணியில் மத்திய உள்துறை அமைச்சகமும் இந்தி மொழிக் குழுவும் இரு முக்கியமான கேள்விகளை எதிர்கொள்ள வேண்டும்: "கடந்த எழுபது ஆண்டுகளில் இந்தி சிறிதாவது வளர்ச்சியைக் கண்டுள்ளதா? அப்படி வளர்ச்சி இருந்திருந்தால், பிற மொழிகளின் வளர்ச்சியைத் தடுத்து அது வளர்ந்ததா?"

மக்கள்தொகைக் கணக்கெடுப்பைச் சற்று அலசினால் சுவாரசியமான விஷயங்கள் வெளிவரும். 2011இல் மொத்த மக்கள்தொகையில் 43.63% (52.83 கோடிப் பேர்) இந்தி மொழி பேசுவோராக இருந்தனர். 1971இல் இது வெறும் 20.27 கோடியாக (மொத்த மக்கள் தொகையில் 36.99%) மட்டுமே இருந்தது. 2001, 2011க்கு இடையிலான பத்தாண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்க விகிதம் 2.6மூஆக இருந்தது. இந்திக்குப் பிறகு அதிகம் பேசப்பட்ட வங்க மொழியின் வளர்ச்சி எதிர்மறை விகிதத்தில் இருந்தது. 1991இல் 8.30% மக்களால் பேசப்பட்ட இம்மொழி, 2001இல் 8.11% மக்களாலும், 2011இல் 8.03% மக்களாலும் பேசப்பட்டது.



அதே வேளையில் தெலுங்கு மொழி பேசும் மக்களின் வீதம் 1991இல் 7.87% ஆகவும், 2001இல் 7.19% ஆகவும், 2011இல் 6.70மூ ஆகவும் படிப்படியாகக் குறைந்தது.

மராத்தி மொழியின் கதையும் கிட்டத்தட்ட இதே தான். மராத்தி மொழி பேசும் மக்களின் வீதம் 1991இல் 7.45மூ ஆகவும், 2001இல் 6.99% ஆகவும், 2011இல் 6.86மூ ஆகவும் படிப்படியாகக் குறைந்தது.

## தமிழின் வீழ்ச்சி

இந்தியாவின் வாழும் மொழிகளில் மிகத் தொன்மையான மொழியான தமிழின் வளர்ச்சிக்கு மத்திய உள்துறை அமைச்சகமானது கொஞ்சமாவது முக்கியத்துவம் தந்திருக்க வேண்டும். ஆனால், தெலுங்கு, வங்கம், மராத்தி போன்றே தமிழ் மொழியின் வளர்ச்சியும் தேய்ந்து போனது. 1991இல் மொத்த மக்கள்தொகையில் 6.32% ஆக இருந்த தமிழ் பேசுவோரின் சதவீதம் 2001இல் 5.91% ஆகவும், 2011இல் 5.70% ஆகவும் குறைந்தது.

## குஜராத்தியும் சம்ஸ்கிருதமும் வளர்கின்றன

பத்தாண்டுகளில் சிறிதாவது வளர்ச்சி அடைந்த ஒரே மொழி குஜராத்தி மட்டும்தான். அதேபோல, சிறிதளவாயினும் வளர்ச்சி பெற்ற இன்னொரு மொழியாக சம்ஸ்கிருதத்தைக் குறிப்பிடலாம். 2021ஆம் ஆண்டுக்கான மக்கள்தொகைக் கணக் கெடுப்பை மேற்கொள்ளும்போது நாட்டிலுள்ள மொழிகள் எத்தனை எனத் திரும்பவும் கணக் கிட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது தொகுதியில் பட்டியலிடப்பட் டுள்ள அனைத்து மொழிகளின் நிலையும் (இந்தி, சம்ஸ்கிருதம், குஜராத்தி நீங்கலாக) சீரழிந்துள்ளது என்பதுதான் உண்மை. இந் நிலையில் இந்தி வளர்ச்சிக்கான நாடாளு மன்ற நிலைக்குழுவானது இந்தியைத் தவிர பிற இந்திய மொழிகள் தேய்ந்துவருவது பற்றிய கவலையைத் தெரிவித்திருக்க வேண்டும்.

## இந்தி மொழி வளர்ச்சி எப்படி?

மற்ற மொழிகளின் வளர்ச்சி குறைந்து வரும்போது இந்தி மொழியின் வளர்ச்சி மட்டும் சீராக உயர்ந்ததன் காரணம் என்ன? உண்மையில் இதற்கான காரணம் அரசின் செயல்பாடுகளில் இல்லை மக்கள்தொகை வளர்ச்சியில் இருக்கிறது!

2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பானது, 52.83 கோடி மக்கள் இந்தி மொழியைப் பேசுவதாகக் குறிப்பிடுகிறது. இவர்களில் இந்தி தவிர கிட்டத் தட்ட ஐம்பது மொழிகளைப் பேசுபவர்களும் அடங்குவர். ஐந்து கோடி மக்களால் பேசப்படுவதாகக் கூறப்படும் போஜ்புரி மொழியானது திரைப்படம், இலக்கி யம், செய்தித்தாள்கள், பாட்டுகள், நாடகம், அச்சுத் தொழில் எனப் பல துறைகளிலும் மிளிர்ந்துவருகிறது. ஆனால், இம்மொழி பேசுவோரும் இந்தி பேசுபவர்களாகக் கணக்கில் காட்டப்பட்டுள்ளனர். இமாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், ஜார்க்கண்ட் மாநில மக்களும் இந்தி மொழி பேசுவோராகச் சேர்க்கப்பட் டுள்ளனர். பவாரி மொழியில் (மகாராஷ்டிர மாநிலத்திலும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் பேசப்படுகிறது) பேசுவோரும் இந்தி மொழி பேசுவோராகக் கணக்கிடப்பட்டுள்ளனர். இவர்களில் பவாரி மொழி பேசுவோரால் இந்தியைப் புரிந்து கொள்ளவே முடியாது என்பதுதான் நகைமுரண்.

ஆக, இந்தி பிராந்தியங்களில் அதிகரிக்கும் மக்கள் தொகையும், அந்தப் பிராந்தியங்களில் உள்ள ஏனைய மொழியினரையும் சேர்க்கும் கணக்கெடுப்பும் இணைந்தே இந்தியின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டுகின்றன.

ஆகவே, இந்தி மொழி வளர்ச்சி பெற்றுள்ளது என்பதே ஒரு கட்டுக்கதைதான். மேற்சொன்ன மொழிகளைப் பேசுபவர்களையும் இந்தி பேசுவோரின் பட்டியலுக்குள் சேர்க்காமல் இருந்திருந்தால் இந்தி மொழி பேசுவோரின் எண்ணிக்கை 39 கோடியாகப் பதிவாகியிருக்கும் (2011ஆம் ஆண்டின் மக்கள்தொகையில் இது வெறும் 32மூ மட்டுமே) இது மற்ற மொழி பேசுவோரின் சதவீதத்தைவிட அவ்வளவு பெரிதாகவும் இருந்திராது.

## இந்தியின் உண்மையான நிலை

இந்தி இனிமையான மொழிதான். உலகிலுள்ள சிறிய / பெரிய மொழிகள் பலவும் அப்படியே. இந்தி சினிமாக்களின் மூலம் இந்தியாவுக்குக் கொஞ் சம் புகழும் சிறிது அந்நியச் செலாவணியும் கிடைத் துள்ளன. இந்தி இலக்கியம் மிக வளமானது. ஆயினும் இருக்கும் மொழிகளில் மிகவும் இளைய மொழி இதுதான். மாறாக தமிழ், கன்னடம், காஷ் மீரி, ஒரியா, சிந்தி, நேபாளி, அசாமிய மொழி ஆகி யவை இதைவிடப் பழமையானவை. தெரிந்து கொள்ள வேண்டிய மொழி என்று பார்த்தாலும் கலைக்களஞ்சியங்களும் பழமையான இலக்கியங் களும் மிகுந்த தமிழ், கன்னடம், வங்கம், மராத்தி ஆகியவை இந்தியைவிடவும் வளமானவை. இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. இந்தி ஒப்பீட்டளவில் அண்மைக் காலத்தில் தோன்றியது. ஒரு மொழி மெதுவாகத்தான் உருவாகும், வளரும். அவசரச் சட்டங்கள் மூலம் அதை வளர்த்துவிட முடியாது.

## அதிக அரசியலும் பொருளாதாரமும்

திடீரென்று இந்தியா 'இந்தி நாடு' என உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறுவதன் காரணம் என்ன?

இந்தி-இந்து தேசியவாதத்தை இணைக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் சித்தாந்தம் அவரை இப்படிச் சொல்ல வைத்திருக்கும் என்று தோன்றவில்லை. பாரதிய ஜனதா கட்சியின் பெரும்பான்மைவாத ஜனநாயகம் இதற்குக் காரணமாக இருந்திருக்கும் என்றும் தோன்றவில்லை.

121 கோடி மக்களில் 52 கோடிப் பேர் இந்தியைப் பேசுகின்றனர் என 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் மிகையாகக் கணக்குக் காட்டப்பட்டிருந்தாலும் இந்தி மொழி பேசுவோர் மொழிவாரிப் பெரும்பான்மையினர் அல்ல என்பதே உண்மை. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பார்த்தாலும் 69 கோடிப் பேர் இந்தி பேசாதவர்களே் எனவே, இந்தி என்பது பெரும்பான்மையோர் பேசும் மொழியாக இருந்ததும் இல்லை இனியும் இருக்க முடியாது. அப்படி இருக்கையில் அமித் ஷா ஏன் அப்படிப் பேசினார்?

'இந்தி பிராந்தியம்' என்று சொல்லப்படும் இந்தி பேசும் மாநிலங்கள் வரும் 2024 தேர்தலில் வெற்றி-தோல்வியைத் தீர்மானிக்கும். இந்த மாநிலங்களின் வேலைவாய்ப்பின்மை என்னும் ஆழமான காயத்துக்குத் தடவும் களிம்பாக அமித் ஷாவின் இந்தப் பேச்சு இருக்கலாம்.

இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பாகிஸ்தான் அச்சுறுத்தலாக இருப்பதைச் சொல்லிப் பெரும்பான்மை இந்துக்களின் ஓட்டுக்களைப் பெறலாம் என்பதைப் போல, ஆங்கிலத்தைத் தேசவிரோத சக்தியாகக் காட்டுவதன் மூலம் இந்தி பேசும் மக்களின் ஓட்டுகளைப் பெற முடியாது என்பதை அமித் ஷா உணரவில்லை போல் இருக்கிறது. இது மொழி சார்ந்த மாபெரும் அபத்தம். அதைவிட முக்கியமாக, இது கூட்டாட்சி அரசியலுக்கு எதிரானது. இந்தியாவிற்கு இது தேவைதானா?

## இலங்கை நெருக்கடி:

# உள்ளூராட்சி சபைகளைக் கலைத்து 150 கோடி ரூபாய் மிச்சப்படுத்த யோசனை

யூ.எல். மப்றூக்




இலங்கையில் உள்ளூராட்சி சபைகளைக் கலைத்தால் 150 கோடி ரூபாய்க்கு மேல் மிச்சப்படுத்த முடியும் என்று யோசனை தெரிவிக்கப்படுகிறது. நாடு கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், அரச நிறுவனங்களின் செலவுகளை இடைநிறுத்துமாறும் குறைக்குமாறும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் எரிபொருள், தொடர்பாடல், நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றுக்கான செலவுகளைக் குறைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதே போன்று கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் வாடகைக்குப் பெறும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் நிதியமைச்சு கூறியுள்ளது.

வெளிநாட்டு கல்விச் சுற்றுலா, உள்நாட்டு நிதி மூலமான பயிற்சிகள் ஆகியவற்றினை மேற்கொள்ள வேண்டாம் எனவும், அமைச்சு மற்றும் நிறுவன மட்டங்களில் வழங்கப்படும் பல்வேறு வகையான கொடுப்பனவுகளை அமைச்சரவையின் அனுமதியின்றி வழங்குவதை இடைநிறுத்துமாறும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நலன்புரி, மானிய அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றினை மேற்கொள்ளாதிருக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.மேலதிக நேரக் கொடுப்பனவுகளை இடைநிறுத்துமாறும், உத்தியோகத்தர்களுக்கு அரச கடன் பெற அனுமதி வழங்க வேண்டாம் எனவும் நிதியமைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது.

**உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது**

இந்த நிலையில், நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை அரசாங்கம் நீட்டித்திருப்பதை ரத்துச் செய்து, உடனடியாக உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும் கலைக்க வேண்டும் என்றும், இதன் மூலம் பல கோடி ரூபாய் நிதியை மீதப்படுத்த முடியும் எனவும் பரவலாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் மொத்தமாக 341 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இவற்றுள் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 276 பிரதேச சபைகள் இருக்கின்றன. இதில் 340 சபைகளுக்கான தேர்தல்கள் கடந்த 2018ஆம் ஆண்டிலும், எல்பிட்டி பிரதேச சபைக்கான தேர்தல் 2019ஆம் ஆண்டும் நடைபெற்றன.

இதற்கமைய மேற்படி உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலங்கள், கடந்த பெப்ரவரி மாதம் நிறைவுக்கு வந்தன. இதனையடுத்து 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் - இந்த சபைகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதாக கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் அறிவித்தது.

உள்ளூராட்சி சபைகள் அனைத்திலும் மொத்தமாக 8,690 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 845 பேர் மாநகர சபை உறுப்பினர்கள், 483 பேர் நகர சபை உறுப்பினர்கள், 7,362 பேர் பிரதேச சபை உறுப்பினர்களாவர். நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் 223 சபைகளின் அதிகாரங்களை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி கைப்பற்றியிருந்த நிலையில், இந்த சபைகளின் பதவிக் காலங்கள் நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**எவ்வளவு மிச்சம்?**

உள்ளூராட்சி சபைகளின் கூட்டங்கள் சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் நடைபெறும், தேவையேற்படும் போது விசேட கூட்டங்களும் நடத்தப்படும். மாநகர சபை கூட்டங்களில் கலந்து கொள்ளும் அதன் உறுப்பினர்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழக்கப்படுகிறது. மாநகர சபையின் முதல்வருக்கு 30 ஆயிரம் ரூபாவும் பிரதி முதல்வருக்கு 25 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

இதே வேளை நகர சபை மற்றும் பிரதேச சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. மேலும் இவற்றின் தவிசாளர்களுக்கு (தலைவர்கள்) 25 ஆயிரம் ரூபாவும், பிரதித் தவிசாளர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் கிடைக்கின்றது.

எனவே, தற்போது நீடிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ரத்துச் செய்து - அவற்றினைக் கலைத்து விட்டால், பதவி நீட்டிக்கப்பட் டுள்ள காலத்துக்காக அந்த சபைகளின் உறுப்பினர்க ளுக்கு, வழங்கப்படவேண்டிய கொடுப்பனவு கிட்டத்தட்ட 152 கோடி ரூபாயை மிச்சப்படுத்த முடியும் என்பது கணக்கீடுகளில் தெரிகிறது.

இதேவேளை, ஒவ்வொரு சபைக் கூட்டங்களையும் நடத்துவதற்கான வேறு செலவுகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சமூக ஊடகங்களில் சிலர் இந்த உள்ளூராட்சி சபைகளைக் கலைக்கவேண்டும் என்று பதிவிடுகின்றனர்.

**அதிகார சமநிலை இல்லாமல் போய்விடும்**

இந்த நிலையில், அரச நிதியை மீதப்படுத்துவதற்காக உள்ளூராட்சி சபைகளைக் கலைத்தல் வேண்டும் என முன்வைக்கப்படும் கருத்து தொடர்பில், கிழக்கு மாகாண முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளர் எம். உதயகுமாரிடம் பிபிசி தமிழ் பேசிய போது "நாட்டில் மாகாண சபைகள் அனைத்தும் கலைக்கப்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி சபைகளையும் கலைத்து விட்டால், மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு உள்ளூர் மட்டங்களில் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்" எனக் கூறினார்.



உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டால், அடுத்த தேர்தல் வரை ஒவ்வொரு உள் ளூராட்சி சபையின் நிர்வாகத்தினையும் ஒவ்வொரு ஆணையாளரிடம் (Commissioner) கையளிப்பதற்கு சட்டத்தில் இடமுள்ளது. ஆனால், தற்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் - உள்ளூராட்சி சபைகளும் கலைக்கப்பட்டால், மக்கள் பிரதிநிதிகளின் பங்கு பற்றுதல்கள் இச்சபைகளில் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்".

"அரசியல் மற்றும் நிர்வாக ரீதியாக அதிகாரங்களைப் பரவலாக்குவதற்காகவே மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி முறைமைகள் கொண்டுவரப்பட்டன. இந்த நிலையில் உள்ளூராட்சி சபைகளைக் கலைத்து விட்டு, அதன் பொறுப்புகள் ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் போது, பாதிப்புகள் ஏற்படத்தான் செய்யும்".

"அதேவேளை உள்ளூராட்சி சபைகளைக் கலைத்து விட்டாலும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் வரை, அச்சபைகளின் பொறுப்புகளை ஆணையாளர்களிடம் தொடர்ச்சியாக வழங்க முடியாது. இடையில் தேர்தலொன்றை நடத்த வேண்டி வரும். அப்படியொன்றால் தேர்தலொன்றை நடத்துவதற்கும் பாரிய செலவு ஏற்படும்" என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தனிநபர் ஒருவரிடம் அச்சபைகள் பொறுப்பளிக்கப்படும் போது, அவற்றின் நிருவாகங்கள் பிழையாகக் கையாளப்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதாகவும் உதயகுமார் சுட்டிக் காட்டினார். நாடாளுமன்றமும் இன்று குழம்பிப் போயுள்ள நிலையில், மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் உள்ளூராட்சி சபைகளையும் கலைப்பது நல்லதல்ல. அடிமட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு இல்லாமல் போய்விடும்".

"உள்ளூராட்சி சபைகள் இயங்கும் போது, அங்கு அச்சபைகளினுடைய உறுப்பினர்களின் கண்காணிப்பு இருக்கும். அந்த சபைகள் கலைக்கப்படாத வரை, தனி நபர் ஒருவர் தீர்மானங்களை எடுக்க முடியாது. ஆளுந் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் ஆதரவு டன்தான் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டியிருப் பதால் அங்கு அதிகார சமநிலை இருக்கும்.

ஆனால், சபைகள் கலைக்கப்பட்டால் - ஆணையாளர் எனும் தனிநபரின் தீர்மானத்தின் கீழ்தான் சபைகள் இயங்கும். அப்போது ஊழல் - மோசடிகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று எப்படிக் கூற முடியும்" எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

**களத்தில் நின்று பணியாற்றும் நிலை இருக்காது**

"உள்ளூராட்சி சபைகள் செயற்பாட்டில் இருந்தால், அடுத்த தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காகவாவது, களத்தில் நின்று மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றுவார்கள். உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டால், அந்த நிலை இருக்காது. சபைகளில் பொறுப்பேற்கும் ஆணையாளர்கள் அவ்வாறு செயற்படுவார்கள் எனக் கூற முடியாது" என்கிறார் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ. தாஹிர்.

"உள்ளூராட்சி சபைகளில் அதிகமானவை தற்போதுள்ள அரசாங்கக் கட்சியின் அதிகாரத்தின் கீழ் உள்ளன. எனவே, அடுத்த தேர்தல் வரும் போது, உள்ளூர் மட்டத்தில் அதனை எதிர்கொள்ள வேண்டும் என்பதால், உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதற்கு அரசாங்கம் விரும்பவே மாட்டாது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மாகாண சபைகள் அனைத்தும் கலைக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி சபைகளையும் கலைத்து விட்டால், திண்மக் கழிவககற்றல் போன்ற மக்களின் மிகவும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் கூட - சிக்கல் நிலை தோன்றும் எனவும் அவர் கூறினார்.

**மக்களுக்கு லாபமாக அமையும்**

இவை இவ்வாறிருக்க, நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் - பதவிக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பது பயனுள்ள நடவடிக்கையாக அமையும் என்றும், இன்று இரவே அந்தச் சபைகள் கலைக்கப்பட்டாலும் நல்லது எனவும், அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா பிபிசி தமிழுக்குத் தெரிவித்தார்.

"கால நீட்டிப்புச் செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதால் எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படப் போவதில்லை. அந்த சபைகளைக் கலைத்து செலவுகளை மீதப்படுத்துவதென்பது மக்களுக்கு நல்லது" என்றும் தவிசாளர் அமானுல்லா கூறினார்.


அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு, உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதென்றால் அதனைத் தான் வரவேற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


(பிபிசி)

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ·்றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ·்றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

### 02.05.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

### 02.05.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## ஜெல்லி மீன் தாக்குதலில் மீனவர் ஒருவர் உயிரிழப்பு

கல்முனை, மே 09

கடலில் இறங்கிய மீனவர் ஜெல்லி மீன் கூட்டத்தின் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார்.

அம்பாறை - காரைதீவில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (வயது -51) என்பவே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், சக மீனவர்களுடன் இணைந்து மீன்பிடியில் ஈடுபட்ட பின்னர், கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் படகில் இருந்து கடலில் இறங்கி வலையை சரி செய்ய முயற்சித்துள்ளார்.

இவ்வாறு வலையை சரி செய்ய கடலுக்குள் இறங்கிய மீனவரை, ஜெல்லி மீன்கூட்டம் தாக்கியுள்ளது. சக மீனவர்களால் மீட்கப்பட்டு, காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் மீனவரை சிகிச்சைக்காக சேர்த்தபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டாரெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-1)

# ராஜபக்ஷக்களை பாதுகாக்கவே அவசரகால சட்டம் நடைமுறை!

### மஹ்ரூப் எம். பி. குற்றச்சாட்டு



திருகோணமலை, மே 09

ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்கே அவசரகால சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று அவர் கருத்துரைக்கையில்,

"நாட்டில் தற்போது அவசர கால சட்டம் நடை மறைப்படுத்தப்பட்டிருப்பது புதிய விடயமல்ல. தனது சகோதரரை பாதுகாக்க அரசியலமைப்பை மாற்றிய இவர்களுக்கு இதுவொரு விடயமல்ல. தனது குடும்பத்தை பாதுகாக்கவே இந்த அரசியல் நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

"மக்களின் போராட்டத்தை திசை திருப்பவே பிரதமர் பதவி விலகுவார் என்ற செய்தியை பரப்பி நாடகமாடுகிறார்கள். மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனாலும், ராஜபக்ஷர்கள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் தங்களின் அதிகாரத்தை தக்கவைக்கவே நினைக்கிறார்கள்.

"இடைக்கால அரசாங்கம் என்பது ராஜபக்ஷர்களினதும் மொட்டுக் கட்சியினதும் கீழ் பிரதமரை ஏற்று அமைப்பதை ஐக்கிய மக்கள் சக்தி விரும்பாது. மீண்டும் விமல் மற்றும் உதயன் கம்மன்பில போன்றவர்களுடன் ஆட்சியை கொண்டு செல்வதா என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை கலைத்து, தேர்தலை நடத்துவது என்ற கோரிக்கையே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடகவுள்ளது" - என்றார். (ஐ)

## கல்முனையில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

கல்முனை, மே 09

முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த சொகுசு ஜீப் வண்டி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் ஒந்தாச்சிமடத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இதில், களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான நாகராசா விஜேந்திரன் (வயது 58) என்பவரே உயிரிழந்தார்.

மட்டக் களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளை அதே திசையில் பின்னால் சென்ற சொகுசு ரக ஜீப் வண்டி மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-1)

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு கூட்டமைப்பு இன்னும் தீர்மானம் இல்லை!

கொழும்பு, மே 09

எதிர்கட்சியால் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கை இல்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இன்னும் எவ்வித இறுதி தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், இராசமாணிக்கம் சாணக்கியன் இதனை தெரிவித்தார்.

இதேநேரம், ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரப்படும் அவநம்பிக்கை பிரேரணைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என அவர் குறிப்பிட்டார். (ஐ)

## பாம்பு தீண்டி ஒருவர் மரணம்!

திருகோணமலை, மே 09

வயலில் காவலுக்கு இருந்த வயோதிபர் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

திருகோணமலை - திம்பிரிவெவை பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மாத்தளை சேர்ந்த 66 வயது நபரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

உயிரிழந்த நபர் 6 வருடங்களாக இந்தப் பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டு வந்துள்ளார். வயலுக்குள் நுழைந்த யானையை விரட்டுவதற்காகச் சென்றபோது அவரைப் பாம்பு தீண்டியது. அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்தார். (ஐ)

## கல்முனை பேருந்துநிலையத்தில் சட்டவிரோத கட்டுமான முயற்சி!

### பொலிஸில் நேற்று முறைப்பாடு

கல்முனை, மே 09

கல்முனை புதிய பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியை சட்டவிரோதமாக உரிமை கொண்டாடிய நபர் ஒருவருக்கு எதிராக மாநகர சபையால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை - கல்முனை மாநகர சபைக்குக்கு அருகாமையில் புதிதாக புனர்நிர்மானம் செய்யப்பட்டு மக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்ட பேருந்து நிலையத்தின் ஒரு பகுதி தனக்கு சொந்தமானது என கூறி தனிநபர் ஒருவர் கட்டுமானம் ஒன்றை மேற்கொள்ள நேற்று முனைந்தார்.

இதனை அறிந்த கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம். றகீப் சம்பவ இடத்திற்கு சென்றதுடன் சட்டவிரோதமாக பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியை தனக்கு உரித்தானது என தெரிவித்த நபருடன் பேச்சு நடத்தினார். இதைத் தொடர்ந்து பொலிஸ் முறைப்பாடும் அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, அந்த நபரின் கட்டுமானத்தை தடுக்கும்விதமாக பறிக்கப்பட்டிருந்த கற்கள், மண் என்பவற்றை மாநகர சபையினர் எடுத்துச் சென்றனர். (ஐ-1)

## கல்லடியில் ஆலயத்துக்குள் நுழைந்து குழு தாக்குதல்!

### - பூசகர் உட்பட நால்வர் காயம் -

மட்டக்களப்பு, மே 09

கல்லடி திருச்செந்தூர் ஆலயத்துக்குள் நுழைந்த இளைஞர் குழு ஒன்று ஆலய குருக்களையும் கட்டட வேலைகளில் ஈடுபட வந்தவர்களையும் தாக்கியது. இதில் நால்வர் காயமடைந்தனர்.

வியாழக்கிழமை இரவும் மறுநாள் வெள்ளிக்கிழமை பகலும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் காத்தான்குடி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தில் மதில் அமைத்து வரும் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் சமூகவிரோத செயல்பாடுகளில் ஈடுபடும் குழு ஒன்று அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## பொலிஸார் - மக்கள் மோதல் மனித உரிமை குழு விசாரணை!

அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையிலான குழு விசாரணைகளை நடத்தியுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பொலிஸார் மற்றும் பொதுமக்களிடம் இவ்விடயம் சம்பந்தமாக விசாரணைகளை ஆரம்பித்து வாக்குமூலங்களையும் பெற்றுள்ளனர்.

அட்டாளைசேனையில் அண்மையில் பொலிஸார் பொதுமக்களிடையே ஏற்பட்ட மோதலில் 13 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில், பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் நபர் ஒருவர் இறந்துவிட்டதாக அங்கு நின்றவர்கள் கூறிய வதந்தியே கலவரமாக மாறக் காரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர குறித்த சோதனைச் சாவடி தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் ஏற்கனவே வெளியாகியுள்ளதாக தற்போதைய விசாரணைகளில் இருந்து வெளியாகியுள்ளது.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சோதனைச் சாவடியுடன் மோதுண்டனர் என்றும் இதையடுத்து பதற்றம் ஏற்பட்டதாகவும் பொலிஸ் தரப்பு தெரிவித்தது. இந்நிலையில், இது உண்மைக்கு புறம்பானது என்று மக்கள் மனித உரிமை ஆணைக் குழுவுக்குத் தெரிவித்தனர். (ஐ)

## மட்டு. மாநகரின் மயானங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு!



மட்டக்களப்பு, மே 09

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பொது மயானங்களின் தூய்மையைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றைத் துப்பரவு செய்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் பணிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவனின் தலைமையில் பிரதி முதல்வர் க.சத்தியசீலனின் வேண்டு கோளுக்கு அமைய, சின்ன ஊறணி, கல்லடி உப்போடை இந்து மயானங் கள் இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டன. இந்த சிரமதானப் பணிகளில் பெருமளவு இளைஞர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர். (ஐ)



# 21 குண்டுகள் முழங்க மக்ரோன் பதவியேற்பு

பாரிஸ், மே 09

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய மக்ரோனின் உத்தியோகபூர்வ பதவியேற்பு வைபவம் எலிஸே மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றிருக்கிறது.

எலிஸே மாளிகையின் நிகழ்வு மண்டபத்தில் நடைபெற்ற அரசு வைபவத்தில் மக்ரோனின் துணைவி, குடும்பத்தினர், பிரதமர் ஜீன் காஸ்ரோ உட்பட அரசாங்கப் பிரதிநிதிகள், பாராளுமன்றங்களின் இரு அவைகளினதும் பிரமுகர்கள், முன்னாள் அதிபர்களான நிக்கலஸ் சார்க்கோசி, பிரான்ஷுவா ஹொலன்ட், முன்னாள் பிரதமர் எத்துவா பிலிப் ஆகியோர் உட்பட சுமார் ஐநூறு பேர் மட்டுமே கலந்து கொண்டனர்.

பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகள் கலந்து கொள்வது இதுவே முதன்முறையாகும். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது தவணைக்கு மீளத் தெரிவாகிய முதல் ஜனாதிபதி என்ற வகையில் அவரின் உத்தியோகபூர்வ பதவியேற்பு நிகழ்வு புதிய ஜனாதிபதி ஒருவரது பதவியேற்பில் காணப்படுவது போன்ற சில வழக்கமான நடைமுறைகளைக் கொண்டிருக்க வில்லை.

1988 இல் பிரான்ஷுவா மித்ரோனும் 2002 இல் ஜக் சிராக்கும் இவ்வாறு இரண்டாவது தவணைக் காலத்துக்குத் தெரிவாகியிருந்தனர். நிகழ்வின் தொடக்கத்தில் 58.5வீத வாக்குகள் பெற்று மக்ரோன் வெற்றி பெற்றிருப்பதை நாட்டின் அரசமைப்புச் சபையின் தலைவர் முறைப்படி அங்கு அறிவித்தார். அவருக்கு முன்பாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார் மக்ரோன். அதன் பிறகு உரையாற்றிய அவர் "அதிக வலிமையான பிரான்ஸ் தேசத்தையும் மனிதர்கள் மேலும் சிறப்பாக வாழ்வதற்கு உகந்த உலகத்தையும் உருவாக்குவதற்கு உறுதி கூறுகிறேன்-என்று பத்து நிமிட உரையில் தெரிவித்தார்.

பின்னர், இராணுவ அணிவகுப்பை ஏற்றுக்கொள்ள முன்பு மக்ரோன் தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தினார். அச்சமயம் பாரிஸ் நகரில் மரபு முறைப்படி 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. (ஐ)



# பொது இடங்களில் பெண்கள் முகத்தை மறைப்பது கட்டாயம்!

## தலிபான்கள் அறிவிப்பு

காபூல், மே 09

ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் வெளியே வரும்போது கட்டாயம் தங்களின் முகத்தை மறைத்துக் கொண்டு வரவேண்டும் என்று தலிபான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.


இதுகுறித்து அந்நாட்டின் நல்லொழுக்கத்தை பரப்புதல், தீமையைத் தடுத்தல் அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் செய்தியாளர் சந்திப்பில் கூறும்போது,

"ஆப்கானிஸ்தானில் வீட்டை விட்டு பெண்கள் வெளியே வரும்போது, உடலை முழுவதும் மூடக் கூடிய நீலநிற புர்கா அணிந்தே வரவேண்டும். அவ்வாறு முகத்தை மறைக்காமல் வரும் பெண்களின் தந்தை அல்லது நெருங்கிய ஆண் உறவினர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள், அரசாங்க வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தலிபான் அரசாங்கத்தின் தலைவரான ஹிபத்துல்லா அகுந்த்ஸாடா கூறியிருக்கிறார் -என்றார்.

மத நம்பிக்கை காரணமாக, பல ஆப்கான் பெண்கள் தலையில் முக்காடு அணிந்து முகத்தை மறைத்திருந்தாலும், காபூல் போன்ற நகரங்களில் பெண்கள் முகத்தை மறைப்பதில்லை. முன்னதாக, கடந்த மார்ச் மாதம், கொரோனா பொது முடக்கத்திற்கு பின்னர் மீண்டும் பள்ளிகள் திறந்த சில மணி நேரத்திற்குள்ளாகவே தலிபான்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளை மூடச் சொல்லி உத்தவிட்டனர். இந்நிலையில் கட்டாய புர்கா சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன்மீது ரஷ்யா அணு ஆயுதத்தை பயன்படுத்துவதற்கு அறிகுறி இல்லை!

## அமெரிக்காவின் சி. ஐ. ஏ. தலைவர்



வாஷிங்டன், மே 09

"ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு தோல்வி ஏற்பட்டால் தாங்க முடியாது என்று நம்புகிறார். அதேவேளையில், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான எந்த அறிகுறிகளையும் அவர் காட்டவில்லை", என்று ரஷியாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் பில் பர்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியைப் பற்றி அதிகம் அறிந்தவரான, அமெரிக்க உளவுத்துறை இயக்குநராக இருக்கும் பில் பர்ன்ஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ரஷ்யப் படைகள் கீவை கைப்பற்றத் தவறிய போதிலும், தென்கிழக்கு டான்பாஸ் பகுதியில் முன்னேற அவர்கள் போராடினாலும், உக்ரைனை தனது படைகளால் தோற்கடிக்க முடியும் என்ற தனது பார்வையை ரஷ்ய ஜனாதிபதி இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை.

உக்ரைனில் வெற்றி பெறுவதற்காக அணு ஆயுதங்களை பயன் படுத்த மொஸ்கோ தயாராக இல்லை. ஆனால், இந்த சாத்தியக்கூறுகளை நாம் இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது.

போர் எப்படி முடிவடையும் என்று என்னால் கணிக்க முடியாது. தற்போதைய போர்க்கள நிலைமையை என்னால் மதிப்பீடு செய்யவும் முடியாது.

உக்ரைனின் எதிர்ப்பை முறியடிக்கும் ரஷ்ய இராணுவத்தின் திறனில் புதினுக்கு நம்பிக்கை உள்ளது. முக்கிய போர்க்களத்தில் தோல்விகளை சந்தித்தாலும் ரஷ்ய இராணுவத்தின் திறமை மீதான புடினின் நம்பிக்கை இன்னும் அசைக்கப்படவில்லை - என்றார். (ஐ)

# 130 கோடி பவுணஸ் இராணுவ உதவி உக்ரைனுக்கு அளிக்க பிரிட்டன் உறுதி!

லண்டன், மே 09

உக்ரைனுக்கு மேலும் 130 கோடி பவுணஸ்கள் பெறுமதியான இராணுவ உதவி களை வழங்குவதாக பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா புார் தொடுத்தது. ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் போரிட அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் உதவி வருகின்றன. இந்த நிலையிலேயே உக்ரைனுக்கு மேலதிக உதவிகளை அவர் அறிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடந்த போர்களுக்குப் பிறகு மற்றொரு நாட்டில் இராணுவத்துக்காக பிரிட்டன் அறிவிக்கும் அதிக நிதி ஒதுக்கீடு இதுவாகும்.

"ரஷ்ய ஜனாதிபதி புடினின் மிருகத்தனமான தாக்குதலால் உக்ரைனில் பேரழிகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் போர் ஐரோப்பா முழுவதும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது", என்று உதவி அறிவிப்பின் பின்னர் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கூறினார். (ஐ)

# விண்வெளி மையத்திலிருந்து 4 வீரர்கள் பூமி திரும்பினர்!



நியூயோர்க், மே 09

ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 6 மாதங்களைக் கழித்த நான்கு விண்வெளி வீரர்கள் சகிதம் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியுள்ளது.

நாஸா விண்வெளிவீரர்களான தோமஸ் மார்ஷ்பேர்ன், ராஜா சாரி, கேலா பாரொன் மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தைச் சேர்ந்த ஜேர்மனிய விண்வெளி வீரரான மத்தியஸ் மோரரர் சகிதம் விணகலம் அமெரிக்காவின் புளோரிடா மாநில கடற்கரைக்கு அப்பாலுள்ள கடலில் வெள்ளிக்கிழமை இறங்கியுள்ளது.

இந்த விண்வெளிவீரர்கள் நால்வரும் எமது பூமிக்கு மேலாக 250 மைல் தொலைவில் வலம் வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 177 நாட்களைக் கழித்திருந்தனர்.

இந்நிலையில் அந்த விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புறப்பட்டு சரியாக 24 மணி நேரம் கழித்து நேற்று பூமியை வந்தடைந்துள்ளனர். (ஐ)

# மருத்துவமனையில் துப்பாக்கி சூடு; இரு நோயாளிகள் பலி; மூவர் காயம்!

கேப்டவுன், மே 09

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் உள்ள நியூ சோமர்செட் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரு நோயாளிகள் கொல்லப்பட்டனர். பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

35 வயதுடைய குற்றவாளி ஒருவர் மருத்துவ கவனிப்புக்காக நியூ சோமர்செட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு பாதுகாப்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் நிறுத்தப்பட்டிருந்தார். அவருடன் கைதி நோயாளிக்கு வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, கைதி நோயாளி அதிகாரியின் துப்பாக்கியை பறித்து சுட்டார் என்று கூறப்படுகின்றது.

இதில், இரு நோயாளிகள் உயிரிழந்தனர். பொலிஸ் அதிகாரி பலத்த காயமடைந்தார். மேலும் இருவரும் காயமடைந்தனர்.

மருத்துவமனைக்கு விரைந்த பொலிஸார் கொலையாளியை கைது செய்துள்ளனர். (ஐ)



# கொல்கத்தா அணியை வீழ்த்தியது லக்னோ!

மும்பை, மே 09

ஐ.பி.எல். 53வது லீக் போட்டியில் கொல்கத்தாவை வீழ்த்தி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

177 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய கொல்கத்தா அணிக்கு முதல் வரிசை மிகப்பெரிய சரிவை எதிர்கொண்டது. கடந்த இரண்டு போட்டிகளாக பந்துவீச்சில் மிரட்டி வரும் லக்னோவின் மொஹ்சின் கான் இம்முறை ஆரம்ப ஓவரையே சிறப்பாக வீசினார். இனிங்ஸின் முதல் ஓவரை தொடங்கி வைத்த அவர், அதை ஓட்டமற்ற ஓவராக வீசினார். இதேசமயம் பாபா இந்திரஜித் விக்கெட்களைம் எடுத்து கொல்கத்தா அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

அப்போது ஆரம்பித்தது சரிவு. இதன்பின் வந்த கொல்கத்தாவின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்களில் அரோன் பின்ச் மட்டுமே இரு வரிசை இலக்கத்தில் ஓட்டங்கள் எடுத்தார். மற்றபடி ஷ்ரேயாஸ் ஐயர், நிதிஷ் ராணா, ரிங்கு சிங் என அனைவரும் ஒற்றை இலக்கங்களில் அடுத்தடுத்த ஓவர்களில் நடையைக் கட்டினர். இதனால் 25 ஓட்டங்கள் எடுப்பதற்குள்ளாகவே 4 விக்கெட்களை இழந்திருந்தது கொல்கத்தா. அந்த்ரே ரஸல் மட்டுமே அந்த அணியில் ஆறுதல் அளிக்கும்படி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 19 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்தபோது அவரும் ஆட்டமிழக்க, அதன்பின் வந்தவர்கள் லக்னோ அணியின் வேகப்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தங்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர். இதனால் 14.3 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது படுதோல்வி அடைந்தது கொல்கத்தா அணி.

75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற லக்னோ அணிக்கு ஆவேஷ் கான் மற்றும் ஹோல்டர் தலா மூன்று விக்கெட்கள் வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய, லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக், கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. முதல் ஓவரிலேயே கே. எல். ராகுல் விக்கெட்டாகி வெளியேறினார். ஒருபுறம் குயின்ரன் டி கொக் அதிரடி காட்ட, தீபக் ஹூடா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 50 ஓட்டங்கள் சேர்த்திருந்த டி கொக் 7ஆவது ஓவரில் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து தீபக் ஹூடா 41 ஓட்டங்களிலும், குர்ணல் பாண்ட்யா 25 ஓட்டங்களிலும் அரங்கம் திரும்பினார். தொடர்ந்து 3 சிக்ஸர்களை விளாசிய மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 28 ஓட்டங்களிலும், ஜேசன் ஹோல்டர் 13 ஓட்டங்களிலும், நடையைக் கட்டினர். ஆயுஷ் படோனி 13 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

துஷ்மந்த சாமீர ஓட்டம் எதுவும் எடுக்காமல் கடைசி பந்தில் ஆட்டமிழந்தார். இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்த லக்னோ அணி 176 ஓட்டங்களை சேர்த்தது.

கொல்கத்தா அணி தரப்பில் ரஸல் 2 விக்கெட்டுகளையும், ரிம் சௌதி, ஷிவம் மாவி, சுனில் நரேன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# ஹசரங்க அசத்தல் பந்துவீச்சு; பெங்களூர் அபார வெற்றி!

மும்பை, மே 09

ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூர் அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 54ஆவது ஆட்டத்தில் ஹைதராபாத், பெங்களூர் அணிகள் நேற்று பலப்பரீட்சை நடத்தின.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பெங்களூர் அணியின் தலைவர் டு பிளசிஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இதையடுத்து களமிறங்கிய பெங்களூர் அணியின் தொடக்க வீரர் கோலி முதல் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர், களமிறங்கிய ராஜத் பட்டிடர், டு பிளெசிஸூடன் ஜோடி சேர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 38 பந்துகளில் 48 ஓட்டங்களை எடுத்திருந்தபோது பட்டிடர் சுச்சித் வீசிய பந்தில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இருப்பினும், நான்காவது ஆட்டக்காரராக களமிறங்கிய மக்ஸ்வெல்லும் சிறப்பான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். 24 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவரும் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். முதல் இனிங்ஸ் பரபரப்பான கட்டத்தை நோக்கி சென்றபோது, தினேஷ் கார்த்திக் களமிறங்கி சரவெடி நிகழ்த்தினார். நான்கு சிக்ஸர்களை பறக்கவிட்டு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். இறுதியாக, 20 ஓவர்கள் முடிவில் மூன்று விக்கெட் இழப்புக்கு பெங்களூரு அணி 192 ஓட்டங்களை எடுத்தது. நிலைத்து நின்று ஆடிய டு பிளெஸ்ஸிஸ் 73 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.




ஹைதராபாத் அணி சார்பாக சுச்சித் அதிகபட்சமாக இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினார். 193 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஹைதராபாத் அணியில் அபிஷேக் சர்மா மற்றும் கப்டன் கேன் வில்லியம்சன் ஆகியோர் களமிறங்கினர். ஆனால், ஹைதராபாத் அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீரர்கள் இருவரும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த ராகுல திரிபாதி சிறப்பாக விளையாடினார். அவர் 37 பந்துகளில் 58 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். எஞ்சிய பேட்டர்களில் மார்க்ரம் 21, நிக்கோலஸ் பூரன் 19 மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர்.

மற்ற வீரர்கள் அடுத்தடுத்து வெளியேற ஹைதராபாத் அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது. பெங்களூர் பந்துவீச்சில் ஹசரங்கா 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். (ஐ)




கிறிஸ்கெய்ல் கவலை

# ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டில் உரிய மரியாதை கிடைக்கவில்லை!

ஜமைக்கா, மே 09

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் உரிய மரியாதை கிடைக்கவில்லை என்றும் தான் சரியாக நடத்தப்படவில்லை என்றும் ரி - 20 கிரிக்கெட்டின் ஜாம்பவான் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் தவிர்க்க முடியாத வீரராக வலம் வந்த அதிரடி சிக்ஸர் நாயகன் கிறிஸ் கெயில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர்சிபி) அணிகளுக்காக விளையாடினார். இறுதியாக பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். 2019-இல் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் 6ஆவது இடம் பிடித்தபோதும் 2020-இல் பஞ்சாப் கிங்ஸின் விளையாடும் அணியில் அவருக்கு இடம் கிடைப்பது சிரமமாக இருந்தது.

2020 ஐ. பி. எல். போட்டியில் 7 போட்டிகளில் 288 ஓட்டங்கள் எடுத்தார். 2021-இல் 10 போட்டிகளில் விளையாடி 193 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த நிலையில் ஐபிஎல் கிரிக்கெட்டில் தனக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை என கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

மேலும், “கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐ. பி. எல். சென்ற விதத்தைப் பார்க்கும்போது நான் சரியாக நடத்தப்படவில்லை என்று நினைக்கிறேன். இந்த விளையாட்டுக்கும் ஐ. பி. எல். கிரிக்கெட்டுக்கும் நிறைய பங்களிப்பை அளித்தபோதும் உரிய மரியாதை கிடைக்கவில்லை. எனவே, சரி இருக்கட்டும் என ஐ. பி. எல். கிரிக்கெட்டில் நுழையாமல் இருப்பது பற்றி கவலை கொள்ளாமல் அதை அப்படியே விட்டுவிட்டேன்.

கிரிக்கெட்டுக்கு அப்பால்பட்டு எப்போதுமே ஒரு வாழ்க்கை இருக்கும். யதார்த்தத்துடன் ஒத்துப்போக முயற்சிக்கிறேன். நான் அடுத்தாண்டு வருகிறேன். அவர்களுக்கு நான் தேவை. ஐ. பி. எல். கிரிக்கெட்டில் கொல்கத்தா, ஆர்.சி.பி மற்றும் பஞ்சாப் என 3 அணிகளுக்காக விளையாடியுள்ளேன். இதில் ஆர்சிபி மற்றும் பஞ்சாப் அணிகளுக்கிடையே ஏதேனும் ஒரு அணிக்கு கோப்பை வென்று தர விரும்புகிறேன்” என்றார்.

# புதிய வரவு - செலவு திட்டத்தை உடன் சமர்ப்பிக்க வேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

கொழும்பு, மே 09

நடைமுறையில் உள்ள வரவு - செலவு திட்டம் நீக்கப்பட்டு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்ட வரவு -செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆப்கானிஸ்தானை காட்டிலும் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை காரியாலயத்தில் இளைஞர் யுவதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடியுடன் அரசியல் நெருக்கடியும் தீவிரமடைந்துள்ளது. டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் எதிர்வரும் வாரமளவில் டொலரின்பெறுமதி 400 ரூபாயை அண்மிக்கும்.

வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டதால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு பலர் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளனர். மறுபுறம் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரித்த நிலையில் உள்ளன. இலங்கையில் தனிநபர் வருமானம் டொலரை விட குறைந்த மட்டத்துக்கு சென்றுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். பெற்றோலிய கூட்டுத்தாபனம் அரசுக்கு சுமையாக இல்லாமல் இலாபமடைய வேண்டுமாயின் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட வேண்டும்.

தற்போதைய நிலைமையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டால் அது சமூக கட்டமைப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். நடைமுறையில் உள்ள வரவு- செலவு திட்டத்தை புறக்கணித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் கடன் நிலைபேண் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். பொருளாதாரம் மறுசீரமைக்கப்பட வேண்டுமாயின் வெளிநாட்டு கடன் செலுத்தல் நிலைமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். புதிய பொருளாதார திட்டங்கள் வகுக்கப்படல் அவசியம் அத்துடன் அரசாங்கம் மாறும் போது பொருளாதார கொள்கை மாற்றமடையாத வகையில் நிலையாக கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று முறை அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை தொடர்பில் அவதானம் செலுத்தி பாராளுமன்ற மட்டத்தில் அடுத்தக்கட்ட நகர்வு குறித்து அவதானம் செலுத்த வேண்டும். அரச நிதி அதிகாரம் முழுமையாக பாராளுமன்றிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

ஜனாதிபதி ,பிரதமரை பதவி விலகுமாறு மக்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். பிரதமர் பதவி விலகுவதாக குறிப்பிட்டுள்ளாரென அறிய முடிகிறது. பிரதமர் பதவி விலகியவுடன் மக்களின் போராட்டம் நிறைவு பெறுமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்தல்,தேசிய சபை ஊடாக இடைக்கால அரசாங்கம்,அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம், ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை உள்ளிட்ட யோசனைகள் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை குறித்து மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வது அவசியமானது என்றார்.

(ஐ)

# பொலிஸ், இராணுவத்துக்கு ஒத்துழைப்பு அளியுங்கள்!

## பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு, மே 09

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார, சமூக நெருக்கடி மற்றும் அமைதியின்மையை நிர்வகிப்பதற்கு புத்திசாலித்தனமாகவும் பொறுமையாகவும் ஒத்துழைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மக்களை கேட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு விடுத்த அறிக்கையில்,

நாட்டில் எங்கிருந்தும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான மக்களின் ஜனநாயக உரிமையை ஜனநாயக கட்டமைப்புக்குள் அனைத்து இலங்கையர்களும் மதிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில், போராட்டக்காரர்கள் வன்முறையான முறையில் நடந்துகொள்வதும், பொலிஸ் மற்றும் படையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதும், அவர்களை அச்சுறுத்துவதும் காணப்படுகிறது.

இதன் காரணமாக, நாட்டின் பெரும்பான்மையான சட்டத்தை மதிக்கும் குடிமக்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பராமரிக்க மிகவும் சிரமப்படுகிறார்கள்.

இந்த அவசர நிலையை கருத்தில்கொண்டு ஜனாதிபதி அவசரகால நிலையை பிரகடனப் படுத்தியுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கு மிகவும் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் செயல்படுமாறு நாட்டின் அனைத்து பொறுப்புள்ள குடிமக்களையும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொள்கிறது - என்றுள்ளது.

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 - 09 - 1959



மறைவு
05 - 05 - 2022

### ஆறுமுகம் வேலாயுதர் (குணம்)

கிளிநொச்சி மாசார் பளையைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Brugg ஐ வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதர் அவர்கள் 05.05.2022 வியாழக்கிழமை அன்று வீதி வாகன விபத்தில் அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம், பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசிலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், லிதர்சன்(சுரேன்), சிந்துயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வினுசா அவர்களின் ஆசை மாமனாரும், ஜெயமதி அவர்களின் பாசமிகு சகோதரரும், இராஜேந்திரம் (ராஜா) அவர்களின் ஆசை மச்சானும்,நிவேதன், நீல்ஸ் ஆகியோரின் தாய் மாமனும்,மேகலா அவர்களின் அன்புச் சித்தப்பாவும்,இந்திரா, மலர், வதனா, ஜெயா, துசியந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஸ்ரீகாந்தா, காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் பன்னீர்ச்செல்வம், மதன்ராஜ், சுலோசனா ஆகியோரின் சகலனும், துசா, ஜெனு, நிசா, சியா, சில்வியா, நாதியா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கேவின், யாணு ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அஷ்விதன், அதிசையா, அபூர்வன் ஆகியோரின் அன்பு மாமாவும், வாசன், தயா, கோனேஸ், துசி, ரஜீவன், சாரு ஆகியோரின் அன்பு மாமாவும்,டிலக்சன், இந்து, சஞ்சய், அக்ஷ்யன், சுவிர்த்தனன், சுவிர்த்தனா, சுகிர்த்தனன், பிரணவி, ஐஷரன், விபீஷன், அம்சிகா, அரியானா, ரித்விக் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் அவார்.

பார்வைக்கு
Saturday, 07 May 2022 2:00 PM - 7:00 PM
Sunday, 08 May 2022 2:00 PM - 7:00 PM
Monday, 09 May 2022 2:00 PM - 6:00 PM
Friedhof Brunnenwiese Müllernstrasse 8, 5430 Wettingen, Switzerland

கிரியை
Tuesday, 10 May 2022 9:00 AM - 12:00 PM
Krematorium Liebenfels Zürcherstrasse 108, 5400 Baden, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சுரேன் (மகன்)** Mobile : +41764062704
**மதி (சகோதரி)** Mobile : +4915906495963
**பன்னீர்ச்செல்வம் (சகலன்)** Mobile : +41796790909

தகவல்:
**மதி (சகோதரி).**

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 - 07 - 1950



மறைவு
04 - 05 - 2022

### சின்னையா சிவம்

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவம் அவர்கள் 04.05.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னையா, விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், அருணாச்சலம் சின்னக்கண்டு தம்பதிகளின் அன்பு மருமகனும்,தங்கா அவர்களின் அன்புக் கணவரும், சிவலுதன், சிவாஜினி, சிவந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பானு, சசிகாந் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,மகேஸ்வரி, காலஞ்சென்ற ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கறுப்பையா, செல்லையா, ராசு மற்றும் ராசலிங்கம், கணேஸ், கமலா, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகலனும், குட்டிக்கிளி, ராசன், ராணி, கயன், குயன், ராகவி, கீர்த்தனா, கீர்த்தீபன், கிசோனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாஜினி, முகிந்தன், ஸ்ரீபன், அருண், விமல், அனெக்ஸ், லக்ஷனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,டஷ்வினி, சர்வின், அர்வின், சைலஜன், லஸிகா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 07 May 2022 3:00 PM - 5:00 PM
Sunday, 08 May 2022 3:00 PM - 5:00 PM
Monday, 09 May 2022 3:00 PM - 5:00 PM
PFG - SERVICES FUNÉRAIRES 15-17 Rue de la Prte de Buc, 78000 Versailles, France

கிரியை
Wednesday, 11 May 2022 9:00 AM - 11:30 AM
PFG - SERVICES FUNÉRAIRES 15-17 Rue de la Prte de Buc, 78000 Versailles, France

தகனம்
Wednesday, 11 May 2022 12:30 PM - 1:30 PM
Crematorium de Clamart 104 Rue de la Prte de Trivaux, 92140 Clamart,France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**லுதன் - மகன்** Mobile : +33629385553
**சசி - மருமகன்** Mobile : +33642535550
**ஸ்ரீபன் - பெறாமகன்** Mobile : +33762616314
**கஜன் - மருமகன்** Mobile : +33603250708

தகவல்:
**சசி (மருமகன்)**

## 21ஆவது...

இந்த திருத்த பிரேரணை தனிநபர் பிரேரணையொன்றாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுகிறது. இரண்டாம் வாசிப்பின்மீதான விவாதத்தில் வாக்கெடுப்பின் பின்னர் சட்ட திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

பாராளுமன்றத்தில் ஆறு வாரங்களுக்குள் இந்த சட்ட திருத்தம் நிறைவேற்றப்படலாமென எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் 'ஈழநாடு'க்கு தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்படாத பட்சத்தில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அல்லது அறுதிப் பெரும்பான்மையுடன் சட்டத் திருத்தம் விரைவில் நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேசமயம், 20ஆவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை குறைப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவைக்கு யோசனைகளை முன்வைத்திருந்தார். இதனால், ஆளும் பொதுஜன பெரமுன கட்சியும் 21ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்கும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம், ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தின. இதன்போது 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் பேசப்பட்டதாக மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார். (ஐ)

## பிரதமராகிறார்...

வதற்கு ஏதுவாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரான மயந்த திஸநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்வார் என்று அறிய வருகின்றது.

எது எப்படி இருப்பினும் இன்றைய தினம் இது தொடர்பான முக்கிய அறிவிப்புக்கள் வெளியாகும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம், இடைக்கால அரசாங்கம் பதவியேற்பதற்கு வாய்ப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று திங்கட்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்யக்கூடும் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நம்பகமாக தெரிவித்தன. (ஐ)

## கடலில் மூழ்கி...

என்ற 35 வயதான ஒருவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சட்டத்தரணிகள்...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபையுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 13 முக்கிய தீர்மானங்களை அதன் நிறைவேற்று சபையில் முன்வைத்து ஏகமனதாக நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது. இதன்போது சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தப் பிரேரணைகள் தொடர்பில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் போது அனைத்து முன்மொழிவுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன - என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாராளுமன்றத்தை உடனே கூட்டுங்கள்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு

கொழும்பு, மே 09

பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன், சாணக்கியன் ஆகிய எம்.பிக்கள் பங்கேற்றனர்.

இதன்போதே, மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி.தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தின் அமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆணைக்கு அமைவாக நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் அமுலாக்கப்பட்ட இந்தச் சட்டம் பத்து நாட்கள் வரையில் செல்லுபடியானது. அதன் பின்னர் அது பாராளுமன்றினால் அனுமதிக்கப்படுகின்றதா இல்லையா என்பது வேறுவிடயம். ஆனால், குறித்த காலப்பகுதியினுள் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயல்பாடுகளும் சட்டரீதியானவையாகவே கொள்ளப்படும்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாது விட்டாலும் குறித்த பத்துநாட்களுக்குள் அந்தச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற விடயங்கள் சட்ட வலுவற்றவையாக அமையாது.

ஆகவே, இந்த அவசரகால சட்டத்தை தற்போதுஅமுலாக்கியமையின் பின்னால் வேறு திட்டங்கள் இருக்கின்றன என்றே நாங்கள் கருகின்றோம். ஆகவே, உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டி இந்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று சபாநாயகரிடத்தில் வலியுறுத்தினோம்.

அச்சமயத்தில் அவர் இன்று திங்கட்கிழமை கட்சித்தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுவதாகவும் அச்சமயத்தில் இந்த விடயத்தை கலந்துரையாடலுக்கு எடுப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும் கூறினார் - என்றார். (ஐ)

## மண்ணெண்...

கூட்டுறவு சங்கத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளார்.

சில மணி நேரத்தில் மண்ணெண்ணெய் முடிந்து விட்டது என ஊழியர்கள் அறிவித்தனர். இதனால் மண்ணெண்ணெய் கிடைக்காமலே வீடு திரும்பி இருந்தார்.

நேற்று முன்தினமும் மீண்டும் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக சென்று நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்துள்ளார். அவர் அருகில் சென்றதும் மண்ணெண்ணெய் முடிவடைந்து விட்டது என ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனால், கடும் மனவிரக்தியுடன் வீடு திரும்பியவர், மனைவியிடம் இன்றும் தன்னால் மண்ணெண்ணெய் வாங்க முடியவில்லை என கவலையுடன் கூறி படுத்தவர் , சில நிமிடங்களிலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

வகையில் முன்மொழிவுகளை முன்வைத்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மற்றும் அரச தலைவர்களுக்கு ஏற்கனவே இரண்டு கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

முன்மொழிவுகளின் அடிப்படையில் நெருக்கடிக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி பதில் அளித்திருந்த போதிலும், ஜனாதிபதி மற்றும் அரச தலைவர்களின் செயலற்ற தன்மை குறித்தும் மூன்று பௌத்த தலைமை பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி மூன்றாவது கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

## பாடசாலையில்...

துள்ளது. இந்த எண்ணிக்கை 2020ஆம் ஆண்டு 42 இலட்சத்து 72 ஆயிரத்து 289ஆக காணப்பட்டது.

இந்த தரவுகளின் அடிப்படையில் கடந்த ஆண்டு கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 529ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், ஆசிரியர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு 994இனால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இரண்டு...

நிதிகளும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் எம். பி.,

ராஜபக்ஷக்கள் இல்லாத இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க நாம் தயாராகவுள்ளோம். இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சுகளை பெறுவது தொடர்பில் நாம் பேசவில்லை. நாம் இடைக்கால அரசாங்கத்தை ஆதரிப்பதானால், அதற்கு வழிப்பாதை ஒன்று அவசியம். ஜனாதிபதி விலகி செல்லவேண்டும், நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்பதே அந்த வழிப்பாதை. எது எப்படி இருப்பினும் மீண்டும் ராஜபக்ஷக்கள் ஆட்சியே ஐக்கிய மக்கள் சக்தி உடன்படாது - என்றார். (ஐ)

# எரிபொருள் கட்டுப்பாட்டை அறிவித்தது லங்கா ஐ.ஓ.சி.!

கொழும்பு, மே 09

லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் இன்று முதல் வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கல் மட்டுப்படுத்தப்படுகிறது என்று அந் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, மோட்டார்சைக்கிள், முச்சக்கரவண்டி, கார் மற்றும் சிற்றூர்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தொகைக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுமென லங்கா ஐஓசி அறிவித்துள்ளது.

இதற்கமைய, மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகபட்சமாக 2,000 ரூபாய்க்கும், முச்சக்கர வாகனங்களுக்கு அதிகபட்சமாக 3,000 ரூபாய்க்கும், கார், ஜீப் மற்றும் சிற்றூர்திகளுக்கு அதிகபட்சமாக 8,000 ரூபாய்க்கும் மாத்திரமே லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பேருந்துகள், பாரஊர்திகள் மற்றும் வணிக வாகனங்களுக்கு இந்த வரையறை பொருந்தாது என லங்கா ஐ.ஓ.சி. அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலும் மேற்படி வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்கலும் கடந்த 5 ஆம்திகதி முதல் மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அவசரகால சட்டத்தை உடன் நீக்கவேண்டும்!

## மருத்துவ சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே 09

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்துவதனூடாக அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொள்வோர் வன்முறையில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் என இலங்கை மருத்துவ சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்புக்கு செவி சாய்த்து பிரச்னைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, தற்போதைய ஸ்திரமற்ற நிலையை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் சாதாரண குடிமக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கடலில் குத்து...

இதனால், அவர் குத்துக்கரணம் அடித்துள்ளார். குத்துக்கரணம் அடித்து எழுந்தவர் மீண்டும் விழுந்துள்ளார்.

அங்கு நின்றவர்களின் உதவியுடன் அவரை உடனடியாக வேலணை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இந்தியா செல்ல முயன்று பிடிபட்டோருக்கு பிணை!

மன்னார், மே 09

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு படகில் கை குழந்தையுடன் சென்ற இளம் குடும்பம் உட்பட 12 பேரை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து சனிக்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் மடு தேக்கம் பகுதியை சேர்ந்த பத்து மாத கைக்குழந்தையுடன் இளம் குடும்பத்தினரையும், பேசாலை பகுதியை சேர்ந்த 7 பேரை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்தும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு பெண்கள் சட்டவிரோதமாக படகில் இலங்கைக்கு சொந்தமான தீடை பகுதியில் இறக்கி விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 12 பேரும் சனிக்கிழமை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இரு சிறுவர்களையும் பொற்றோரிடம் ஒப்படைக்குமாறும் ஏனைய 10 பேரையும் சுமார் 50,000 ரூபா சரீர பிணையில் செல்லவும் உத்தரவிட்டார். (ஐ)

Eelanadu

பிரதி சபாநாயகர் தெரிவு

## அரசியல் ஆட்டம் ஆடியவர் பஸில் ராஜபக்ஷ மட்டுமே!

கொழும்பு, மே 09

பிரதி சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சி சார்பில் ரஞ்சித் சியாம்பலபிட்டியவை நிறுத்தி அவரை பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற வைக்க அரசியல் ஆட்டம் ஆடியவர் பஸில் ராஜபக்ஷவே என்று கூறப்படுகின்றது. நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

'அசிங்கமான விளையாட்டு' என்ற தலைப்பில் வெளியான அந்தக் கட்டுரையில்,

அரசியல் ஆட்டம் ஆடியவர் வேறு யாருமல்லர் பஸில் தான் என்று கற்பனை செய்வது கடினம் அல்ல. பஸில் குறுகிய காலத்தில் உருவாக்கிய அரசை இவ்வளவு சீக்கிரம் எதிர்க்கட்சியின் கைகளில் சிக்க வைப்பார் என்று யாரும் நினைத்துக்கூட பார்க்க முடியாது. இந்தப் பாராளுமன்றத்தில் ஆட்டம் எப்படி நடக்கிறது என்பது பஸிலுக்கு மட்டுமே தெரியும். அமைச்சர் பதவியை இழந்த போதிலும் பஸில் தன்னால் இயன்றதை செய்கிறார் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

தன்னை அசிங்கமான அமெரிக்கன் என்று திட்டிய விமலோடு இணைந்து ஆட்சி அமைக்கத் தயாராகும் பஸில் இந்த அரசை இலகுவாக விட்டு விடுவார் என எதிர்க்கட்சிகள் நினைப்பது மிகப் பெரிய தவறு என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 10 கோடி டொலர்கள் வழங்குவதற்கு ஆசிய முதலீட்டு வங்கி பரிசீலனை!

கொழும்பு, மே 09

**இலங்கைக்கு 10 கோடி டொலர்களை வழங்குவது குறித்து ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி பரிசீலித்து வருவதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.**

கொள்கையளவில் இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக வழங்குவது குறித்து ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (ஏ.ஐ.ஐ.பி.) பரிசீலித்து வருவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பலதரப்பு கடன் வழங்குனர்களிடமிருந்து, அரச வங்கிகளுக்கான அந்நிய செலாவணி கையிருப்பு ஆதரவை இலங்கை கோரிவருகிறது.

இந்த நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி தலைவர் உறுதியளித்துள்ளதாக நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)



# கோட்டா கோ கம போராட்டம் செங்கலடியில் நேற்று ஆரம்பம்!

மட்டக்களப்பு, மே 09

மட்டக்களப்பு செங்கலடியில் கோட்டா கோ கம போராட்ட இடம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை விரட்டுவோம் என்ற தொனிப்பொருளில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் கள், பொது அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப் பாட்டத்துக்கு அழைப்பு விடுத் ததையடுத்து கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத் தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், பௌத்த தேரர்கள் உட்பட நூற் றுக்கும் மேற்பட்டோர் நேற்றுக் காலை 9 மணிக்கு ஒன்றிணைந்தனர்.

பின்னர், அங்கிருந்து உணவு இல்லை, பால்மா இல்லை, எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை, கொள்ளைக்கார பொருளாதார முறைமைக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம், மக்களின் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு கொடு, அடிக்காதே அடிக்காதே விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே, போன்ற அரசுக்கு எதிரான வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப் பாட்டம் ஆரம்பமானது.

பின்னர், செங்கலடி பஸ்தரிப்பு நிலை யத்தில் கோட்டா கோ கம கூடாரம் அமைத்துத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அந்த பகுதியில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். (ஐ)

## 3500 தொன் எரிவாயுவுடன் புதனன்று வருகிறது கப்பல்



கொழும்பு, மே 09

எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று, வரும் புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிவாயுவை ஏற்றிவரும் 2 கப்பல்களுக் கான கட்டணம் இன்று செலுத்தப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இதற்கமைய, தலா 3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிவந்த 2 கப்பல் களுக்கும் 70 இலட்சம் டொலர் செலுத் தப்படவுள்ளது. இந்த கப்பல்கள் ஓமானிலிருந்து வருவதுடன், இவற்றில் ஒரு கப்பல் தற்போது மாலைதீவை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவன தலைவர் கூறினார்.

இதனிடையே, இந்திய கடன் வசதியின் அடிப்படையில் எரிவாயுவை கொள் வனவு செய்வதற்காக 120 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர, எரிவாயுவை கொள் வனவு செய்வதற்காக உலக வங்கியின் நிதி உதவியின் கீழ், 700 இலட்சம் டொலர் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது.

இதன் மூலம் நாட்டில் தற்போது எரிவாயுவுக்குக் காணப்படும் தட்டுப் பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பெண்ணை தாக்கிவிட்டு தப்பியவர் மின்கம்பியில் சிக்கி உயிரிழந்தார்!

கொழும்பு, மே 09

பெண்ணொருவரை தாக்கிவிட்டு தப்பிச் செல்ல முயன்றவர் உயர் அழுத்த மின்கம்பியில் சிக்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு கிரிபத்கொடையில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் பெண் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். அங்கிருந்து தப்புவதற்காக அருகிலிருந்த கட்டமொன்றின் மீதேறிய அவர் உயர் அழுத்த மின்கம்பியில் சிக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 29 வயதான நபர் ஒருவரே உயிரிழந்தார். இவரின் தாக்குதலில் காயமடைந்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## சட்டவிரோத மணல் கடத்தல் கோப்பாயில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், மே 09

கோப்பாயில் சட்டவிரோதமான முறையில் மணலை கடத்தி, களஞ்சியப்படுத்தி வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய், மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் சட்டவிரோதமான முறையில் மணலை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இது தொடர்பில் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் அனுமதியற்ற முறையில் மணல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 4 டிப்பர் வாகனங்களை கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் திருகோணமலை கடற்கரை மணலை சட்டவிரோதமாக அகழ்ந்து, கோப்பாய்க்கு கொண்டு வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைப்பற்றப்பட்ட 4 டிப்பர் வாகனங்களுடன் சந்தேகநபர்களை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு
ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அவள், கொடிவீரன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா

**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஷ்ரீ

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு